பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 25 ஞாயிற்றுக்கிழமை (09-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 103

### சமாதான முயற்சியை கண்டித்தும் வாழ்க்கைச் செலவு உயர்வை எதிர்த்தும்

# தலைநகரை ஸ்தம்பிக்க வைக்க 10 லட்சம் பேர் நாளை திரள்வர்

## பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி. இணைந்து ஏற்பாடு

கொழும்பு,மார்ச்9

அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும் மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வை ஆட்சேபித்தும் கொழும்பு நகரை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் பெரும் பேரணி ஒன்றை நாளை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் ஓரணியில் இணைந்த பின்னர் இரு கட்சிகளும் ஒன்றாக ஏற்பாடு செய்துள்ள பெரும் போராட்டம் இது எனக் கூறப்படுகின்றது.

கிராமங்களில் இருந்து சுமார் பத்து லட்சம் பேரை நகருக்கு அழைத்து வந்து இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக அவ்விரு கட்சிகளும் அறிவித்துள்ளன.

ஆனால், சுமார் ஐந்து லட்சம் பேர் வரையில் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றலாம் என பொலீஸ் தரப்பு நம்புகின்றது.

நகருக்குள் நுழையும் பிரதான வாயில்கள் ஊடாக நகரைநோக்கி வரும் மக்களால் ஏற்படும் பாதுகாப்பு நெருக்கடிகளை சமாளிப்பதற்காக மேலதிக பொலீஸார் நகரில் குவிக்கப்படவிருக்கின்றனர்.

அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். என்றும் பொலீஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலைநகரில் வந்து குவிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் மாநகரசபை வளாகத்தில் பொதுக் கூட்டத்தை நடத்திய பின்னர் கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமரின் வாசஸ்தலம் நோக்கி ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டுள்ளனர். இதனால் அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எத்தகைய நெருக்கடி நிலையையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## 83 கலவரம் போன்ற ஒன்றை நாளை ஏற்படுத்த ஐ.தே.க முயற்சி

### குற்றஞ்சாட்டி ஜனாதிபதி ரணிலுக்குக் கடிதம்

கொழும்பு,மார்ச்9

கொழும்பில் நாளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து நடத்தும் பேரணியைக் குழப்பி 1983 ஆம் ஆண்டு இனக் கலவரம் போன்ற கலவரம் ஒன்றை உருவாக்க ஐ.தே.கவில் ஒருபகுதியினர் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறிகின்றேன். அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடுகளை உடன் செய்யுங்கள்."

- இப்படி பிரதமரைக் கோரியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி நேற்று அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை திங்கட்கிழமை பொதுமக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கைதிகளை விடுவிக்கக் கோரி செயலகம் முன் நாளை மறியல்

## தமிழ்க் கூட்டமைப்பு ஏற்பாடு; பொது அமைப்புகளும் ஆதரவு

யாழ்ப்பாணம்,மார்ச்9

**தென்பகுதிச் சிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ். செயலகம் முன்பாக நாளை அடையாள மறியற் போராட்டம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. தமிழ்க் கூட்டமைப்பு ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.**

களுத்துறைச் சிறைச்சாலையிலும் ஏனைய சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள், தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது தம்மீதான வழக்கு விசாரணைகளை துரிதமாக்க வேண்டும் என்றுகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், அவர்களை உடன் விடுதலை செய்யக் கோரியும் நாளை முற்பகல் 10.30 மணி முதல் ஒருமணி நேரம் யாழ். செயலகம் முன்பாக அடையாள மறியல் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் சார்பாக தமிழர் விடுதலை கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் 30 பேருக்கு இரத்த வாந்தி!

கொழும்பு,மார்ச்9

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகளில் 30 பேர் இரத்த வாந்தி எடுத்து மயக்கமடைந்துள்ளனர் எனச் செய்திகள் தெரிவித்தன.

தம்மை விடுதலை செய்ய வேண்டும் இல்லையேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்று கோரி 41 தமிழ்க்கைதிகள் கடந்த முதலாம் திகதிமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கைதிகளின் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதாகவும் அவர்களில் பலர் மயக்க நிலையில் உள்ளதாகவும் 30 கைதிகள் இரத்த வாந்தி எடுப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் சிறைச்சாலைக்குச் சென்ற அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக 10 நாள்களுக்கு போராட்டத்தைக் கைவிடும்படி கோரியதும் -

வாக்குறுதிகளில் தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்து தொடர்ந்து அவர்கள் போராட்டத்தை முன்னெடுப்பதும் தெரிந்ததே. (ம-3)

# கல்வி அமைச்சரின் வருகையை எதிர்த்து செவ்வாயன்று பேரணி

## கறுப்புக் கொடி காட்டவும் முஸ்தீபு!

யாழ்ப்பாணம்,மார்ச்9

பாடசாலைகள் கல்வி அமைச்சர் கருமல் ராஜபக்ஷவின் யாழ்வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அடையாள வேலை நிறுத்தம் மற்றும் அமைதிப்பேரணி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நகரில் கூட்டப்பட்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம், உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரிகள் சங்கம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

ஆசிரியர் நியமனங்களில் தாம் புறக்கணிக்கப்படுவதை ஆட்சேபித்து அமைச்சரின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க அந்த அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன.

ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த எட்டு அம்சக் கோரிக்கையை இந்த அமைப்புக்கள் ஏற்று பூரண பகிஷ்கரிப்பில் ஈடுபடும்.

அன்று முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி முன்றிலில் இருந்து பேரணியை ஆரம்பித்து யாழ். செயலகம் வரை நடத்துவது என்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சில் முஸ்லிம் குழுவின் நிலைபற்றி அரசு, புலிகளே முடிவு செய்வர்

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்9

தற்சமயம் இடம்பெறும் சமாதானப் பேச்சுக்களில எந்தக் கட்டத்தில் முஸ்லிம்கள் தனிக்குழுவாக பேச்சில் பங்குபற்ற வேண்டும் என்பதை அரசும் - விடுதலைப்புலிகளும் முடிவு செய்வர் என்று நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர்கள் மீது ஆத்திரப்படுங்கள் அரச அதிகாரிகளை தாக்காதீர்கள்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரவிராஜ்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ். மாவட்டத்துக்கு அதிக நிதியை ஒதுக்குவது போன்று வெளிநாடுகளுக்கு காட்டிக்கொண்டு சிறிய அளவிலான நிதியை ஒதுக்குகின்ற அமைச்சர்கள் மீதுதான் ஆத்திரப்பட வேண்டுமே தவிர சிவில் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மீது கோபப்படக்கூடாது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட இணைப்புக்

(12ஆம் பக்கம் பார்க்க)

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLiNK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns Electronics

# இந்தியாவுடனான ஆட்டத்தில் ஜெயசூரிய ஆடுவார் - வட்மோர்

ஜொகன்னஸ்பேர்க்,மார்ச்9

நாளை திங்கட்கிழமை இந்தியாவுடன் நடைபெறவிருக்கும் மிக முக்கியமான 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவரும் இடதுகை ஆரம்பத் துடுப்பாளருமான



சனத் ஜெயசூரிய விளையாடுவார் என்று அணியின் பயிற்சியாளர் டேவ் வட்மோர் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை ஜெயசூரிய வலைப்பயிற்சியில் ஈடுபட்டதன் பின்னர் அவர் இதனைத்தெரிவித்தார்.

வெள்ளியன்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில், பிரட்லீ வீசிய பந்தினால் தனது இடது கையில் காயமடைந்தார் ஜெயசூரிய. இதனால் அவர் இந்தியாவுடனான முக்கிய ஆட்டத்தில் விளையாட முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால், இப்போது அவர் இந்தியாவுடனான ஆட்டத்தில் ஆடுவார் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

"அவர்(ஜெயசூரிய) அந்த ஆட்டத்தில் பங்கேற்கவில்லை என்றால் தான் நான் ஆச்சரியப்படுவேன். தனிப்பட்ட முறையில் அவர் இப்போது சரியாகி விட்டார் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்" - இவ்வாறு வட்மோர் தெரிவித்தார்.

ஜெயசூரியவால் அந்த ஆட்டத்தில் விளையாட முடியாமல் போனால், அவரது இடத்துக்கு அவிஸ்க குணவர்த்தன அல்லது முபாரக் ஆகிய இருவரில் ஒருவர் விளையாடுவர். ஜெயசூரியவுக்குப் பதிலாக ஒரு ஆரம்பத் துடுப்பாளரே அவசியம் என்பதால் அனேகமாக அவிஸ்க குணவர்த்தன களமிறங்கலாம் என்றும் வட்மோர் கூறினார். (ம)

# இந்தியாவின் கோரிக்கை நிராகரிப்பு

டேர்பன்,மார்ச்9

டேர்பனில் நடைபெறவிருக்கும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தை பகல் நேர ஆட்டமாக மாற்றுமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை ஐ.சி.சி. ஏற்க மறுத்துவிட்டது.

"கிங்ஸ்மீட் டேர்பனில் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் திட்டமிட்டபடி பகல்-இரவு ஆட்டமாக நடக்கும் என்று ஐ.சி.சி. அதிகாரி அலி பாக்கர் அறிவித்தார். தனது மறுப்பிற்கு ஐந்து காரணங்களையும் அவர் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோ

(11ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச போட்டியிலிருந்து அலன் டொனால்ட் ஓய்வு!

கேப்டவுன்,மார்ச்9

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தான் ஓய்வு பெறுவதாக தென்னாபிரிக்காவின் வேகப் பந்துவீச்சாளரும் மிகச் சிறந்த வீரருமான அலன் டொனால்ட் அறிவித்துள்ளார்.



வெள்ளை மின்னல் என்று செல்லமாக அழைக்கப்பட்ட அலன் டொனால்ட் (வயது 36) தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களில் 300 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்திய ஒரேயொரு வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று சனிக்கிழமை அவர் தனது ஓய்வு அறிவிப்பை செய்தியாளர்களிடம் வெளியிட்டார். சர்வதேசப் போட்டிகளில் இருந்து அவர் ஓய்வு பெற்றாலும், இன்னும் சில நாள்களுக்கு அவர் உள்ளூர் போட்டிகளில் விளையாடுவார்.

"விளையாடிய அணிகளுக்காக அனைத்தையும் அர்ப்பணித்தவர்; நாட்டை மிகவும் நேசித்தவர் என்றே நான் நினைவுகூரப்பட விரும்புகின்றேன்" - என்றார் டொனால்ட்.

"நான்கு உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடி இருக்கின்றேன். இம்முறை எங்களுக்கு எதுவும் சரியாக அமையவில்லை. இது விடைபெறும் நேரம். உலகின் மிகச் சிறந்த வீரர்களுடன் விளையாடியது சிறப்பான அனுபவமாக இருந்தது.

"மிகச் சில ஏமாற்றங்களைத் தவிர பெரிய வருத்தங்கள் எவையும் இல்லை. 1999 உலகக் கிண் ணப் போட்டியில்

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு பெறப் போவதில்லை! அக்ரம் திடீரென அறிவிப்பு!!

இஸ்லாமாபாத்,மார்ச்9

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நன்மை கருதி இப்போதைக்குத் தான் ஓய்வுபெறப்போவதில்லை என்று அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளரும் சிரேஷ்ட வீரருமான வஸீம் அக்ரம் திடீரென அறிவித்துள்ளார்.

முன்னதாக, உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி தோற்று வெளியேறியதை அடுத்து, பாகிஸ்தான் சென்றதும் தன் ஓய்வு அறிவிப்பை வெளியிடுவேன் என்று அக்ரம் தெரிவித்திருந்தார்.

தென்னாபிரிக்காவில் இருந்து பாகிஸ்தான் அணி நேற்று தாயகம் திரும்பியது. லாகூர் விமான நிலையத்தில் வந்திறங்கிய வஸீம் அக்ரம் அங்கு வைத்தே செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது ஓய்வு பெறும் எண்ணம் எதுவுமில்லை. எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு, வந்துவிடவில்லை. உலகக் கிண்ணப் போட்டி

(11ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day



நேற்றைய ஆட்டத்தில் 53 ரன்களைப் பெற்ற தையுவின் அதிரடி.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns Group of Companies

# மானம் காத்தார் அரவிந்த!

எதிர்பார்த்தது போலன்றி இலகுவாக வென்று 1996இல் ஏற்பட்ட தோலவிக்கு பழிதீர்த்துக் கொண்டது ஆஸ்திரேலியா. கில்கிறிஸ்ட்டும் பொன்டிங்கும் இலங்கை அணியை அடித்துத் துரத்தினர். பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலையில் இருந்த இலங்கைக்கு கைகொடுத்துக் காப்பாற்றி விட்டவர் ஹைடன். அவர் தவறவிட்ட அரவிந்தவின் பிடிதான், இலங்கை கௌரவமான ஓர் இலக்கை எட்ட உதவியது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் ஆடுகள அறிக்கையில் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி 250 ஓட்டங்களைக் கடக்கக்கூடும் என ஆருடம் கூறப்பட்டது. கூறியவர் ரொனி கிரேக். தங்கள் நாட்டவர் கூறிய ஆருடம் பொய்க்கக்கூடாது என்பதுபோல் ஆஸ்திரேலியா ஆரம்பம் முதலே விளாசியது. முதலிரு ஓவர்கள் தவிர ஓட்டச் சராசரி வீதம் எப்போதும் 6ஓட்டங்களை விட்டு இறங்க மறுத்தது. முதல் 10 ஓவர்களில் பெறப்பட்டது 68 ஓட்டங்கள். அவற்றில் 11 பௌண்டரிகள் அடக்கம். வேகப் பந்துவீச்சாளர்களை வேதனை செய்தனர் ஆஸ்திரேலிய ஆரம்பத் துடுப்பாளர்கள்.

முரளி தன் இரண்டாவது ஓவரில ஹைடனை வெளியேற்றும் வரை ஆட்டமிழப்பு எதுவும் இல்லை. பதிலுக்கு வந்த பொன்டிங்கும் கில்கிறிஸ்டும் முழங்கு முழங்கு என்று முழங்கினார்கள். 45 பந்துகளில் கில்கிறிஸ்ட் அரைச் சதம். அவற்றில் 10 பௌண்டரிகள் அடங்கியிருந்தன. 15 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்கள். பந்துகள் எல்லைக் கோட்டுக்கு மேலும் கீழும் கதறிக் கதறி பறந்தன. 20 ஓவர்களில் 131 ஓட்டங்கள், மேலதிக விக்கெட் இழப்பின்றி. பொன்டிங் 16 ஓட்டங்களைப் பெற்றபோது கிடைத்த அருமையான 'ஸ்டொம்' ஒன்றை சங்கக்கார தவறவிட்டார். மிக மோசமாக களத்தடுப்புச் செய்தது இலங்கை.



25 ஓவர்களுக்குள் 7 பந்துவீச்சாளர்களை மாற்றிப் பார்த்தார் ஜெயசூரிய. எவருக்கும் ஆஸி துடுப்பாளர்கள் மசிவதாக இல்லை. முரளியின் பந்துகளுக்கு மட்டும் சற்றே மரியாதை கொடுத்தார்கள்.

96 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கில்கிறிஸ்ட் கொடுத்த இலகுவான பிடி ஒன்றை அவசரப்பட்டு தவறவிட்டார் 'பக்வேர்ட் பொயிண்ட்' திசையில் நின்ற முரளி. ஆனாலும், 99 ஓட்டங்களில் வாஸின அற்புதமான களத்தடுப்பில் 'ரன் அவுட்' ஆனார் கில்கிறிஸ்ட். 99 ஓட்டங்களில் ஒரு துடுப்பாளர் ஆட்டமிழந்தது இது 13 ஆவது தடவை. 88 பந்துகளில் அவர் 99 ஓட்டங்களை விளாசினார். அவற்றில் 2 சிக்ஸர்கள், 14 பௌண்டரிகள் அடக்கம். 67 பந்துகளில் தன் அரைச் சதத்தை எட்டிய பொன்டிங் 96 பந்துகளில் தன் சதத்தைப் பூர்த்தி செய்தார். 45ஆவது ஓவரில் மொத்த ஓட்டங்கள் 290. பொன்டிங் 114 ஓட்டங்களை அடித்து ஓய, 50 ஓவர்களில் அணி பெற்றது 319 ஓட் டங்கள். 5 விக்கெட்டுக்கள் மட்டுமே இழப்பு.

அதற்கு இலங்கையின் பதில் மிகமிக மோசமானது. லீயின் பந்தில் காயமடைந்து ஜெயசூரிய வெளி

(11ஆம் பக்கம் பார்க்க)

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ச, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# கார் மீது ஏவுகணை வீச்சு; ஹமாஸ் தலைவர் மரணம்!

## காஸாவில் பதற்றம் அதிகரிக்கின்றது

காஸா,மார்ச்9

காஸாவில் கார் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் நிறுவகத் தலைவர்களில் ஒருவரும் அந்த அமைப்பின் இராணுவத் தலைவர்களில் ஒருவருமான இப்ராஹிம் அல்-மஹட்மாஸ் உயிரிழந்தார்.

மேற்குக்கரையில் பலஸ்தீனர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்று சில மணி நேரங்களுக்குள் இத்தாக்குதல் நடந்திருக்கிறது. இஸ்ரேலிய ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து ஏவப்பட்டதாக கூறப்படும் ஏவுகணை ஹமாஸ் தலைவரும் வேறு மூவரும் பயணஞ்செய்து கொண்டிருந்த காரைத் தாக்கியது. கார் சிதறியது. அதில் இருந்த நால்வரும் பலியாகினர்.

ஹமாஸ் தலைவர் இப்ராஹிம் அல் - மஹட்மாஸின் சடலம் காஸா நகர ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. ஹமாஸ் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் ஆஸ்பத்திரிக்கு வெளியே திரண்டிருக்கின்றனர்.

கார் மீது நான்கு றொக்கெட்டுக்கள் வீசப்பட்டன என்று சம்பவத்தை நேரில் கண்டோர் கூறுகின்றனர். இத்தாக்குதலினால் பொதுமக்கள் பலரும் காயமடைந்திருக்கின்றனர். (ஐ)



ஹமாஸ் இயக்கத் தலைவர் பயணம் செய்த கார் சிதறிக் கிடப்பதை நூற்றுக்கணக்கானோர் பார்வையிடுகின்றனர்.

## இஸ்ரேலியரை பழிவாங்குவோம்!

காஸா,மார்ச்9

ஹமாஸ் தலைவர்களில் ஒருவரான இப்ராஹிம் கொல்லப்பட்டிருப்பது அந்த இயக்கத்தினரை சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இப்ராஹிமின் மரணம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதை அடுத்து ஆத்திரமுற்ற ஹமாஸ் ஆதரவாளர்கள் இஸ்ரேலியருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

"இப்ராஹிம்மின் மரணம் இஸ்ரேலியருக்கு எதிரான புதிய போரை திறந்துவிட்டிருப்பதாக' ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

"இஸ்ரேலியத் தலைவர்கள் அனைவரையும் இனி ஹமாஸ் இலக்கு வைத்து பழி தீர்க்கும்" - என்று அவர் சூளுரைத்தார். (ஐ)

## அல்ஜீரிய விமான விபத்தில் 103 பேர் பலி!

அல்ஜியர்ஸ்,மார்ச்9

அல்ஜீரிய பயணிகள் விமானம் வியாழக்கிழமை விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் விமான ஓட்டி உட்பட 103 பேர் உயிரிழந்தனர்.

அல்ஜீரிய அரசுக்குச் சொந்தமான இந்த 'போயிங்' விமானம் வியாழக்கிழமை இரவு 8.15 மணிக்கு டமன்ரசெட் விமானம் நிலையத்திலிருந்து புறப்பட்டது. சற்று நேரத்தில் அது நொறுங்கி விழுந்தது. (ஐ)

## தேடுதல் வேட்டையின் போது ஒஸாமா புதல்வர்கள் காயம்?

இஸ்லாமாபாத்,மார்ச்9

ஆப்கானிஸ்தானில் அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் மீது அமெரிக்க, ஆப்கானிஸ்தான் படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில் அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனின் மகன்கள் ஸாட் பின்லேடன், ஹம்ஸா பினலேடன் இருவரும் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருவரும் பிடிபட்டதாக தகவல் கிடைத்தது. ஆனால், அதை அமெரிக்காவும் பாகிஸ்தானும் மறுத்தன.

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் தேடுதல் வேட்டை வியாழனன்று நடைபெற்றது. அதில், ஒஸாமாவின் மகன்கள் காயமடைந்ததுடன், 9 அல்கெய்டாவினர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் நாடுகளின் எல்லையில் இந்த வேட்டை நடந்தது. ஆனால், ஒஸாமா மகன்கள் பிடிபட்டதாக வந்த செய்தியை பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் பைஸல் சலே ஹயத் மறுத்தார்.

அமெரிக்க அதிகாரிகளும் இதை மறுத்தனர். (ஐ)





போருக்கு எதிரான கோஷங்கள் உலகெங்கும் தீவிரமாக ஒலித்து வருகின்றன. 'போர் வேண்டாம்' என பொங்கி எழுகின்ற சிலி நாட்டு பிரஜைகளை படங்களில் காணலாம்.

## ஈராக்கில் ஆயுதம் எதுவும் சிக்கவில்லை

நியூயோர்க்,மார்ச்9

ஈராக்கில் இரசாயன, உயிரியல் மற்றும் அணு ஆயுதம் எதுவும் ஒளித்து வைக்கப்படவில்லை; அடிக்கடி இடத்தை மாற்றிக்கொண்டே செல்லக்கூடிய நடமாடும் ஆயுதச்சாலைகள் எதுவும் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை அனுப்பிய எங்களுக்குப் போதிய ஒத்துழைப்பை ஈராக் அளித்து வருகிறது - என்று ஆயுதச் சோதனையாளர் ஹன்ஸ் பிளிக்ஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் ஹவுன்சில் உறுப்பினர்களிடம வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் இதை அவர் தெரிவித்தார். (ஐ)

## பிரிட்டன் அவகாசம்

லண்டன்,மார்ச்9

பேரழிவு ஆயுதங்களை கையளிப்பதற்கு ஈராக்குக்கு புதிய அவகாசம் ஒன்றை பிரிட்டன் வழங்கியுள்ளது.

ஈராக் எதிர்வரும் 17 ஆம் திகதிக்குள் பேரழிவு ஆயுதங்களை கைவிடாவிட்டால் இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ளவேண்டும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது. (ஐ)

# பலஸ்தீனத்தின் முதல் பிரதமராக முஹமத் அப்பாஸ்!

ஜெருசலேம்,மார்ச்9.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரான முஹமத் அப்பாஸ் என்பவரை அந்த நாட்டின் முதல் பிரதமராக யஸீர் அரபாத் நியமித்துள்ளார்.

அதிபரின் அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கவேண்டும். சீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச அளவில் அளிக்கப்பட்ட நிர்ப்பந்தத்தைத் தொடர்ந்து அதிபர் அரபாத் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

பலஸ்தீன அதிகாரிகள் அத்தகவலைத் தெரிவித்தனர்.

ரமல்லா நகரில் வியாழக்கிழமை நடைபெற்ற பலஸ்தீன விடுதலை இயக்க செயற்குழுக் கூட்டத்தில் பிரதமராக அப்பாஸை நியமிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

பிரதமர் நியமனத்தை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளை இயக்கத்தின் மத்திய குழுவும் நாடாளுமன்றமும் எடுத்து வருகிறது என்றார் அவர்.

பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள 68 வயதான அப்பாஸ், பலஸ்தீன விடுதலை இயக்க செயற்குழுவின் தலைமைச் செயலர், 'ஃபடா' இயக்கத்தை அரபாத்தும், அப்பாஸும் சேர்ந்துதான் உருவாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. அரபாத்திற்கும் பின்னர் பலஸ்தீன இயக்கத்தின் தலைவராக வர வாய்ப்புகள் அதிகம் உள்ளவர் இவர் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ஈராக் மீது போர் தொடுத்தால்

# அமெரிக்கப் படைகளை கடுமையாக தாக்குவோம்!

## கைதான அல்கெய்டா தீவிரவாதி தெரிவிப்பு

வாஷிங்ரன்,மார்ச்9

ஈராக் நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்தால், அந்த நாட்டு இராணுவத்தின் மீது மீண்டும் கடுமையான தாக்குதலை நடத்துவோம் என்று



காலித் ஷேக்

சமீபத்தில் கைதான அல் கெய்டா தீவிரவாதி காலித் ஷேக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானில் காலித் ஷேக் கைது செய்யப்பட்டார். அந்த நாட்டுப் பொலீஸார் அவரிடம் விசாரணை நடத்தியபோது இத்தகவலை அவர் வெளியிட்டார்.

ஈராக் மீது ஒருவேளை போர் நடத்தினால், பாரசீக வளைகுடாவில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் படைகள் மீது தொடர்ச்சியான மற்றும் பலத்த தீவிரவாதத் தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என்றும் காலித் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் புலனாய்வு அமைப்புகள் இத்தகவலைத் தெரிவித்ததாக 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'அல்கெய்டா' அமைப்பில் பின்லேடனுக்கு அடுத்தபடியாக முக்கிய தலைவர்களில் மூன்றாவதாகக் கருதப்படும் முகம்மது, எகிப்து நாட்டைச் சேர்ந்த அய்மான் ஜவஹிரி ஆகியோர் காலித்திடம் இந்த எச்சரிக்கையை தெரிவித்ததாகவும் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு கூறுகிறது. ஈராக் போர் தொடங்கட்டும். வளைகுடாவில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகள் மீதான அதிரடித் தாக்குதல் நடைபெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு இது பற்றிய முழுத் தகவல் தெரியாது என்று கூறிய முகம்மது, சவூதி அரேபியா மற்றும் கட்டாரிலிருந்து இதுபோன்ற செய்திகள் உங்களுக்கு கிடைக்கும் என்று என் மனத்தில் கருத்து நிலவுகிறது எனத தெரிவித்ததாக விசாரணையின் போது உடனிருந்த பாகிஸ்தான் அதிகாரி குறிப்பிட்டார் என்றும் அந்த பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்க ஆதரவாளராக செயற்படுவதால் உங்களுக்கோ அல்லது உங்கள் நாட்டிற்கோ எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை என்றும் அந்த் தீவிரவாதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

விசாரணையின் போது அவரிடமிருந்து தகவல்களை பெறுவது என்பது மிகக் கடினமான செயலாக இருந்தது. மேலும் அவர் வாய்மௌனியாகவே காட்சி அளித்தார் என்று பாகிஸ்தான் புலனாய்வுத் துறை கூறுகிறது.

உலக அரங்கில்

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடந்த தாக்குதலுக்கு காரணமான முக்கியமானவர்களில் முகம்மதுவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் எந்த இடத்தில் அமெரிக்கர்கள் இருந்தாலும் அவர்களை நிம்மதியாக வாழவிடக் கூடாது என்ற குறிக்கோளுடன் என்னைப் போன்று பலர் அல்கெய்டா இயக்கத்தில் இருப்பதாகவும் முகம்மது தெரிவித்தார்.

## ஈராக் மீது 13 ஆம் திகதி பெரும் குண்டுத் தாக்குதல்?

### பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

ஈராக் மீதான அமெரிக்க போர் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தொடங்கும் என்று பிரிட்டனில் உள்ளூர் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக் மீதான போரில் அமெரிக்காவுக்கு உதவ தனது படைகளை பிரிட்டன் அனுப்பி வருகிறது. 17 ஆம் திகதி போரைத் தொடங்க தயாராக இருக்குமாறு குவைத்தில் உள்ள பிரிட்டன் இராணுவ அதிகாரியிடம் கூறப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை கூறுகிறது. பிரிட்டன் அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி அது இந்தச் செய்தியை தெரிவித்துள்ளது.

முழு அளவிலான போரைத் தொடங்கும்முன் வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை பெரிய அளவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் அது கூறியிருக்கிறது. இந்தச் செய்தியை பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டியபோது அவர்கள் கருத்து தெரிவிக்கவில்லை.

வளைகுடா பகுதியில் அமெரிக்காவும் பிரிட்டனும் 3 லட்சம் இராணுவ வீரர்களை நிறுத்துகின்றன. ஏராளமான போர் கப்பல்களையும் 500 இற்கும் மேற்பட்ட போர் விமானங்களையும் அவை நிறுத்தியுள்ளன.(ஐ)

| | | | |
|---|---|---|---|
| | | சனி. சந். ராகு | |
| புதன். சூ. | இராசிச் சக்கரம் | | வியா. |
| வெ. | | | |
| செ. | கேது | | |

# இந்த வார இராசி பலன்

## 09-03-2003 - 15-03-2003

### மாற்றம்

09.03.2003 இல் கார்த்திகை 2ஆம் பாதம் இடபம் ராசியில் சந்திரன் நிற்கும்.

சமாதானப் பேச்சுத் தொடரும். தெற்கில் தொழிற் சங்க நடவடிக்கைகள், அரசிற்கு பொருளாதார நெருக்கடிகள் தோன்றும். புதிய வழக்குகள் வந்துபோகும். இந்தியா சேதுத்திட்டமெனப் பேச்சு நடத்தும். வடபகுதித் தீவிரவாதிகளின் கை ஓங்கும். அழிவுகள் நடக்கும். மத்திய கிழக்கில் வன்செயல்கள் அதிகரிக்கும். மேற்கு நாடுகளின் பொருளாதாரத் தடைத் திட்டங்கள் அமுலாகும். முஸ்லிம் நாடுகளின் ஒற்றுமை அதிகரிக்கும். அமெரிக்கா போர்ப் பயத்தை உருவாக்கும். அதிக அழுத்தங்கள் கொடுக்கும். அத்திலாந்திக், பசுபிக் சமுத்திரப் பிராந்தியநாடுகளில் போர்ப்பயம் அதிகரிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

படித்தவர்கள் கௌரவமான எதிர்ப்பலைகளைத் தொடுப்பார்கள். படியாதவர்கள் வன்முறைகளைப் பாவித்து எதிர்த்து அழிவுகளை நேரடியாகச் செய்வார்கள். தொழில் ஸ்தாபனத்தில் இந்த அனுபவம் உங்களுக் ஏற்படலாம். சகோதரங்களுக்கு சுபமங்கள கருமங்கள் நடக்க இடம் உண்டு. தெய்வ வழிபாடு, தகப்பனுக்கு கஷ்டங்கள் ஏற்படலாம். வீட்டில் மிருங்கங்களுக்கு வைத்தியம். பொருள் இழப்பு கொடுக்கும். வீட்டில் கலகம் நடக்க வாய்ப்பு. கால் உளைவு, முட்டு, சளி, தலை நோ வர இடமுண்டு. சந்தை வியாபாரம் - பாதுகாப்புத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் கொடுக்கும். மாணவர்களுக்கு போட்டிகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வெள்ளி*

### இடபம்

ஒருவராவது நூறு வீதம் நூல்கொண்டு பார்த்து நேர்மைகளைச் செய்துவருவதால்தான் ஆற்றல் குறைந்தவர்களால் நலிந்தவர்களை உருவாக்க முடிகின்றது. இவர்களும் எமது சமுதாயத்தின் புல்லுருவிகள் தான். தலைமைப் பீடங்களில் உள்ளவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். அல்லது பாவங்கள், சாபங்கள் அவர்களைச் சேரும். தொழில் பீடங்களில் செல்வாக்கால் சில காரியங்களைக் கண்டு குமுறுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். எதிர்ப்பாலாரால் கலக்கம். எதிரிகள் கவனம், பொதுத்தொண்டு புகழைத்தரும். இனஜன உதவி கிடைக்கும். நலைத்தொழில், புத்தகத்துறை, செய்தித் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்கள் கல்விச் சிறப்பை அடைவார்கள். பித்த நோயும், உஷ்ண பீடைகள் கொடுக்கும். வைத்தியம் செய்துவரவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, திங்கள்.*

### மிதுனம்

என்ன சதியா? உங்கள் ஸ்தாபனத்தில் பல தில்லுமுல்லுகளா? அந்நிறுவனத்தில் உள்ளவரைக் கேட்டால் ஏதோ வாங்கிற சம்பளத்திற்காக கடமைகளைச் செய்கின்றோம். நடக்கிற அநியாயங்கள் நடக்கட்டும் என சொல்லி தப்பிவிடுகிறார்கள். நீங்கள் மனம் கேட்காமல் வாக்குவாதப்படுவீர்கள். அரசியல் பேசுவீர்கள். எதிரிகள் உங்களைக்கண்டு விலகுவர். அரச அதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். பொருளொன்று விலக இடம் உண்டு. காணி பூமி விஷயமாகப் பேசுவீர்கள். பிரயாணங்கள் சிலருக்கு வெற்றி தரும். செய்தித்துறை, வியாபாரத்துறை குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். வாய்வுத் தொல்லைகள் வருத்த இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### கடகம்

அரசாங்கக் கட்சியிலிருப்பதிலும் பார்க்க எதிர்க்கட்சியில், இருப்பதனால் பல சவால்களை விடுத்தபடி இருக்கலாம். அதனால் உங்கள் பலவீனங்களிலிருந்து தப்பிவிடலாம் என எண்ணுகின்றீர்களா? அடிக்கடி வாக்குக் கலகம் செய்வீர்கள். பொருள் வரவுகள், வீடு, வாகன சுகம் இடமாற்றங்கள் என்பன கொடுக்கும். அரசியல்துறை, குருத்துறை, செய்தித்துறையினருக்கு மாற்றங்கள் பொருள் வரவுகள் அதிகரிக்கும். பித்தரோகம் கொடுக்கும். மாணவர்கள் நன்மை அடைவர் இடமாற்றங்களால் பொருள் இழப்பு கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்த்தால் நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### சிங்கம்

உண்மைகளை ஒத்துக் கொள்ளுவதனால் பல கஷ்டங்களிலிருந்து தப்பி விடுகிறீர்கள். எதையும் தைரியமாக போராடச் செய்வீர்கள். சூரியன், புதன் பார்வையால் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். மாமன், மாமி, சிறிய தகப்பன் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன சுகம் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினை கொடுக்கும். மாணவர்களுக்கு பொருள்வரவு, பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். பூமியால் இலாபம். மின்சாரப் பகுதியில் வேலை செய்பவர்கள், பாதுகாப்புத் துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் - சனி*

### கன்னி

எதையும் போராடிப் பெற்றால்தான் பெறுமதி. போராடாமல் பெறுவதெல்லாம் மிகவிரைவில் விரயமாகிவிடும். தொழில் ஸ்தானத்திலும் உங்களுக்கு போராட்டம் ஏற்படும். அரச அதிகாரிகள் உதவி செய்வர். தொழில் நிலை மந்தம், பழைய பாக்கிகள் வரவு, வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். சளி, சல வருத்தங்கள், கால் உளைவுகள் கொடுக்கும். பொருள் வரவு ஏற்படும் அறிகுறி தென்படும். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும். செய்தித்துறை, குருத்துறை, பிரயாணத்துறை போன்றவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். இடமாற்றங்களை தவிர்ப்பது நன்று. சிலருக்கு விழுந்து காயங்கள் வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள் - திங்கள், வெள்ளி, சனி.*

### துலாம்

பழகப்பழக பாலும் புளிக்கும் என்பார்கள். அதனால் பாலின் பெறுமதி என்றும் குறைந்து விடாது. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். பொருள் வரவில் தடை வரும். எதிரிகளுடனும், எதிர்ப்பாலாருடனும் கவனம். வீண் குறை, குற்றங்கள் கேட்க நேரிடலாம். தெய்வ பக்தியானவர்களின் ஆலோசனைகள், உதவிகள் கிடைக்கும். புதிய பொருள்கள் வரவால் பொருள் செலவுகள் ஏற்படும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும். அரசியல் துறை, குருத்துறை, சட்டத்துறை போன்றவர்களுக்கு படிப்படியான பொருள் வரவு அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். பிரயாணங்களில் அவதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள் - வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

அள்ளக் குறையாது தண்ணீர். சொல்லக் குறையாது வார்த்தைகள் எல்லாம் அளவுடன் இருந்தால் இயற்கையில் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும். சகோதர உதவிகள் கிடைக்கும். பொருள் வரவும் - செலவும் சமப்படும். புதிய நண்பர்கள் வரவு அதிகரிக்கும். அயலவர்களின் உதவிகளால் ஓரளவு நிம்மதி வரும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். மாணவர்களுக்குள் கருத்து வேற்றுமை வரும். தொழில்நுட்பத்துறை, மருந்துத்துறையினர், அரசியல்வாதிகள் நன்மைகள் அடைவார்கள். சளித் தொல்லை, கால் உளைவு, நெஞ்சு நோ என்பன கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி, சனி.*

### தனுசு

கணனி மயமாகிவருகின்றது உலகம். இதனால் மிகவிரைவில் உடல், உள்ளம், களைத்துள உப்புச் சப்பற்ற வாழ்வாகிவிட வாய்ப்பு உண்டு. அடிக்கடி காட்சிகள் மாற்றம் மனதிற்கு ஓர் ஆறுதலைக் கொடுக்கும். அடிக்கடி பிறருக்கு ஆலோசனைகள் சொல்லுவீர்கள். பொருள் இழப்புகள் வரலாம். குருத்துறை, பிரயாணத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஆதாயம் பெருகி வரும். நீதித் துறையினர்கள் புகழ் அடைவர். எதிர்ப்பாலார்கள் உதவிகள் செயது தருவர். விதிப் பலன்கள் நடக்க இடம் உண்டு. மாணவர்களுக்குப் புதிய நட்பு கிடைக்கும். கல்விச் சிந்தனைகளுக்கு அத்திவாரம் இடுவீர்கள். இனஜனங்களுக்கு உதவி செய்வீர்கள். கால் வருத்தம், உஷ்ண பீடைகள் சிலரை வருத்த இடம் உண்டு. அயலவர்களுடன் கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி, சனி.*

### மகரம்

ஓர் எல்லைக்கு அப்பால் கிரகங்களால் இறைவனால் விதிக்கப்பட்ட பலன்களை மனிதர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. அதைத் தடுக்க அவன் பாதத்தைப் பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. புதிய வழியொன்று தேட முற்படுவீர்கள். மற்றவர்களுக்கு விளங்காத செயற்பாடுகள், மாமன் வழியினருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். உதவிகள் கிடைக்கும். நகை, புடைவை வகைகள்

## மகாதேவா ஜோதிடம்

சேர இடம் உண்டு. தூரதேசப் பிரயாணங்களுக்கு வழியொன்று ஏற்படும். ஆனால், மனமின்றி விடுவீர்கள். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். மருந்து வியாபாரத் துறை, சந்தைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். கால்வருத்தம், நாரி நோ கொடுக்க இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### கும்பம்

கட்டிய மனைவியே கணவனுக்கு மணமகள் தேடுகின்றாராம். அதன் பின்பு கணவரிடம் அன்பாக விடைபெற்று யாழ்ப்பாணம் வருவாராம். காலம் மாறுகின்றது. கருத்துக்களும் மாறும். மக்களின் உறவு முறையும் ஒழுங்கற்றுப் போகும். எல்லாம் மனமாற்றத்தால் ஏற்படும் விந்தையாகும். தொழில் ஸ்தானத்திலும் மனமாற்றம். எதிர்ப்பாலாரின் திடீர் மனமாற்றம், கருத்து மோதல்கள், இடமாற்றங்கள், வைத்தியச் செலவுகள் அதிகரித்தல் போன்றன இடம் பெறும். மாணவர்களுக்கு புதிய சிந்தனைகள் கிடைக்கும். குருத்துறையினர், அரசியல்போக்குள்ளவர்கள் ஆதாயங்கள் அடைவார்கள். கால் நோ, வயிறு, தொண்டையில் பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி.*

### மீனம்

உறுதியான மனோ நிலையில் உண்மைகளை விதைப்பவர்கள் பாக்கியவான்கள். இவர்களுக்கு நன்மைகள் அதிரிக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவு கொடுக்கும். பொருள் ஒன்றை இழந்து அதனால் வாக்குக் கலகம் கொடுக்கும். நண்பர்கள் உதவுவார்கள். இசைத்துறையில் நாட்டம், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் சிறக்கும். மருந்துத்துறை வருமான அதிகரிப்பு, பிரயாணத் துறையில் பொருள் வரவு என்பன அதிகரிக்கும். கால் நரம்பு பாதிக்கும். சளித்தொல்லை கொடுக்கும். சலரோகக்காரர்கள் உணவில் கட்டுப்பாடாக இருக்கவும். இடமாற்றங்களைத் தவிர்த்தால் உடல் நலப்பாதிப்பிலிருந்து தப்பலாம். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், சனி.*

★

# பாவிகளையே இறைவன் தேடிவந்தார்

எமது அன்றாட அனுபவங்கள் நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்து மிகவும் அழகானவையும், மதிப்பு மிக்கவையாகவும் அமைந்திருக்கும். இவையே, எம்மை புடமிடுபவையாகவும், பக்குவப்படுத்துபவையாகவும் இருப்பன என்பதில் ஐயமில்லை.

யேசு அன்று லேவியை மாத்திரம் அழைத்து தன்னைப் பின்செல்லும் படி கூறவில்லை. இன்றும் எம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து தம் உள்ளங்கைகளில்

**தவக்காலச் சிந்தனை**
**- ஐந்தாம் நாள் -**

பொறித்து வைத்திருக்கிறார் இன்னும் அவர் நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே தேடிவந்தார்.

தோமஸ் மேட்கன் என்பவர் எழுதிய ஒரு நூலில் 'மனிதனுடைய வாழ்வு அல்லது கிறிஸ்தவனுடைய வாழ்வு நிலையற்று இருப்பதற்கு காரணம் மனிதனுடைய மனம் நிலையற்றதில் நிலைத்திருப்பதே' என்று கூறுகிறார். மனித வாழ்வு நீர்க்குமிழ் போன்று கண்ணிமைப்பொழுதில் மறைந்து விடும் என்பதை மனிதம் நினைக்கத் தவறுகின்றது.

இறுகிய மனங்களுக்கு விடியலே இல்லை. அடைபட்ட இதயங்களில் இருந்து வாழ்வின் நீரூற்று வழிந்தோடும்? கல்லாக உறைந்துபோன பரிசேயர் பாவிகளோடு பழகுவது தவறு என்று யேசுவிடம் சொல்லாமல் சொன்னார்கள். ஆனால், அவர் கூறுகிறார். நோயுற்றவர்களுக்கு அல்ல நோயற்றவர்களுக்கே மருத்துவர் தேவை என பதிலடி கொடுத்தார். இத்தபக்காலத்தில் பரிசேயக் குணங்களைக் களைந்து ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என எண்ணி வாழ சிந்திப்போம்; செயற்படுவோம்.

**திருமதி டெ.றொ.ஜேசுராஜன்**

எனவே, தெய்வீக சக்திகளும் வல்லமையும் மனிதனின் வறட்டுப் புத்திக்கு தீனி போடுவதற்காக அல்லமாறாக, அது அறியோரை உயர்த்துவதற்காக, பசித்தோரை நிரப்புவதற்காக ஏங்கி இறப்போரை நிறைவு படுத்துவதற்காக ஆகும். நன் மனது படைத்தவர்களே! கடவுளின் செயற்பாட்டை கண்டுணர முடியும் எல்லாம் தெரிந்தவர்கள் என்று இறுமாப்புக் கொள்பவர்களே ஏமாந்து விழுவதைத் தவிர வழியில்லை.

★

# தமிழ் மக்களின் மிச்சசொச்ச ஆதரவையும் ஜனாதிபதியின் கட்சி இழந்து வருகிறது!

## அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படப் பேச்சு நடத்துவதை எதிர்த்து அந்த முன்னணியிலிருந்து பல கட்சிகளும், முன்னணியின் தமிழ் ஆதரவாளர்களும் வெளியேறி வருகின்றனர்.

- இவ்வாறு அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் - தனிநபர் பிரேரணை மீது பேசும்போது தெரிவித்தார்.

அரசு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் புதிய சட்டங்கள் இயற்றவேண்டுமென்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட உறுப்பினர் திருமதி அஞ்சான் உம்மா தனிநபர் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார். இந்தப் பிரேரணை மீது பேசும்போது அமைச்சர் மகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 90 சதவீதமான எம்.பிக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர். இச்சபையில் எதிர்க்கட்சி முன்வரிசையில் இருக்கும் ஒரு சிலர் ஜே.வி.பியுடன் இணைந்து, சமாதான முயற்சிகளைக் குழப்பி இந்த நாட்டில் மீண்டும் கொடூர யுத்தத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு கடந்த காலங்களில் பெரும் அநீதிகள் இடம்பெற்றுள்ளன. முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டு செம்மணியில் மர்மமாகப் புதைக்கப்பட்டிருந்தனர். பலர் காணாமற்போயுள்ளனர்.

இலங்கையின் நீதித்துறை மீது தமிழ்மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். மிருசுவில், செம்மணி, மயிலந்தனை படுகொலைகள் தொடர்பான தீர்ப்புக்கள் தமிழ் மக்களுக்கு அதிருப்தி அளித்துள்ளன. தமிழ் மக்களின் உள்ளங்களை வேதனைக்குள்ளாக்கும் இவ்வாறான செயற்பாடுகள் மீண்டுமொரு யுத்தத்துக்கான அத்திவாரத்தை இடும் என்றே கருத வேண்டியுள்ளது.

தெஹிவளை குண்டுவெடிப்பு, கொழும்பு மாநகரசபைக் குண்டுவெடிப்பு, ஸ்ரீ தலதா மாளிகை குண்டு வெடிப்பு ஆகியவை தொடர்பாக பல அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறு சிறு குற்றங்களைச் சுமத்தி பல தமிழ் இளைஞர், யுவதிகள் அரசியல் கைதிகளாகியுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருக்கின்றனர். சிலர் இரத்த வாந்தி எடுக்கின்றனர். இவர்களைப் பற்றிப் பேச இன்று எவருமில்லை.

இவ்வாறான பல இன்னல்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் சமாதானத்திற்காக அனைத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டு பொறுமையுடன் இருக்கின்றனர் - என்றார் அவர்.

**கே.என்.சொக்ஸி**

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி பேசுகையில் கூறியதாவது:-

அரச வங்கிகள் மக்களுக்கு மட்டுமல்லாமல் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் பெரும் சேவையாற்றி வந்தன. தனி நபர்கள் மட்டுமல்ல. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், போக்குவரத்துச் சபை ஆகியனவும் இந்த வங்கிகளுக்கு பெருந்தொகைப் பணம் செலுத்தவேண்டியுள்ளன.

எமது அரசு பதவி ஏற்ற பின்னர் அரச வங்கிகளில் அரசியல்வாதிகளின் சிபார்சில் கடன் வழங்குவது

(08ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

# முத்தரப்புக்கு முன்னர் முக்கியமான விடயம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

- இவ்வாறு பிரதமரை நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்தித்துப் பேசிய வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றிய உறுப்பினர்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

ஏதோ புது விடயத்தை தாங்கள் சாதித்துவிட்டது போன்றும், பிரதமர் ரணில் புலிகளுடன் பேசி தங்களையும் ஒரு தரப்பாக பேச்சுக்களில் பங்குபற்ற ஏற்பாடு செய்து தரப்போகிறார் என்ற பாணியிலும் அவர்கள் நீட்டி முழக்கியிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் புதிதாக ஒரு பெறுபேறும் வந்துவிடவில்லை என்பதுதான் உண்மை.

6 மாதத்துக்கு முன்பு - தற்போதைய சமாதான முயற்சிகளின் முக்கிய அங்கமான நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே - அந்தப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பில் பங்குபற்றவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அப்போது ஒன்றுபட்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் - முஸ்லிம்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதிநிதியாகக் கருதப்படக்கூடியவர் என்ற அந்தஸ்துடன் - இக்கோரிக்கை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினார். பின்னர் லண்டனுக்குச் சென்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து அவரிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அப்போதே, சமாதானப் பேச்சுக்களின் ஒரு கால கட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் குழுவொன்றை மூன்றாவது தரப்பாக ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டு விட்டது. கொள்கை அளவில் அதற்கான இணக்கத்தை பேச்சுக்களில் பங்குபற்றும் இரு தரப்புக்களான அரசும் புலிகளும் அப்போதே பிரகடனப்படுத்தி விட்டன.

ஆனால், பேச்சுக்களின் ஆரம்பத்தில் அல்ல; உரிய தருணம் வரும்போது - அரசியலில் தீர்வு பற்றிய விடயங்களை இறுதி செய்யும்போது - பின்னர் வரும் சுற்றுக்களில் (Subscquent Rounds) முஸ்லிம்களின் தனித் தரப்பை பேச்சுக்களுக்கு அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

எனவே, முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குபற்றுவது பற்றிய கோரிக்கை இப்போதுதான் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது போலவும், தாங்கள் பெரும் 'புரட்சி' செய்துதான் அதைப் பெற்றுக்கொண்டிருப்பது போலவும் சில முஸ்லிம் தலைவர்கள் காட்ட முயல்வது சுத்த அபத்தமாகும்.

ஏற்கனவே கொள்கை அளவில் அரசுத் தரப்பினாலும் புலிகள் தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயத்தை எப்போது நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து முஸ்லிம் தலைவர்கள் பேசலாம்; வலியுறுத்தலாம்; வற்புறுத்தலாம்; இறுக்கிப்பிடிக்க முயலலாம். அது வேறு விடயம்.

தனித் தரப்பாக பேச்சுக்களில் முஸ்லிம்கள் பங்குபற்றவேண்டியதன் அவசியத்தை பிரதமர் மட்டுமல்ல, தலைவர் பிரபாவும் ஏற்றுக்கொண்டுள்ளார்; அங்கீகரித்துள்ளார். ஆனால், அதற்கு காலம் கனியவேண்டும் என்பதுதான் முக்கியம். அதை முஸ்லிம் தலைவர்கள் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நேற்றுமுன்தினம் மதியுரைஞர் பாலசிங்கத்தை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் சந்தித்தபோதும் இவ்விடயம் ஆராயப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு வடிவத்தில் முஸ்லிம்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளுக்கும் இடமளிப்பதற்கான உத்தி குறித்து முதலில் தமிழர் தரப்பு தங்களுக்குள் கலந்தாலோசனை செய்யவேண்டும். பின்னர் தமிழர் தரப்பும் முஸ்லிம் தரப்பும் தங்களுக்குள் பேசி ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அந்த ஏற்பாட்டுடன் முத்தரப்புப் பேச்சுக்குள் போவதே வீண் ரசபாதங்களைத் தவிர்க்க உதவும். இதுவே யதார்த்தம்.

இதனை முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக முஸ்லிம்களை சரியாக - நியாயமாக - ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தலைமை ஒன்று தேவை.

கூட்டாகப் போய் பிரதமரைச் சந்திப்பது வேறு. முத்தரப்பு மேசையிலும் அதற்கு முன்னர் நடக்கக்கூடிய - அது தொடர்பான - பூர்வாங்கக் கலந்துரையாடல்களிலும் அத்தகைய பிரதிநிதித்துவ அதிகாரத்தோடு செயலாற்றும் தலைமையை வெளிப்படுத்துவது வேறு.

முதலில் அதைக் கண்டுபிடித்து, பிரகடனப்படுத்தி சகல தரப்பினதும் அங்கீகாரத்தை அதற்குப் பெற்றுக்கொண்டு, முத்தரப்புக்குத் தயாராவதே சம்பந்தப்பட்டோருக்கும் நல்லது; பேச்சு முயற்சிகளுக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் நல்லது. இல்லையேல், முத்தரப்பு என்ற பெயரில் முப்பது தரப்பை அனுமதிக்கவேண்டி வந்துவிடும்.

# மேலும் 800 குடும்பங்களுக்கு ஜி.ரி.இசற்றினால் வீடுகள்

## அமைத்துக் கொடுக்க முடிவு

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ். குடாநாட்டில் மேலும் 800 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் 10 மணியளவில் யாழ்.செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வீடற்ற மேலும் 800 பேரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுப்பதென அங்கு முடிவு செய்யப்பட்டது. இதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அதிகாரிகளும் யாழ். செயலக உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த 800 பயனாளிகளில் ஊர்காவற்றுறை,வேலணை, நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 50 பயனாளிகளும் தென்மராட்சி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 175 பயனாளிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ம-10)

## திருவீதி மான்மியம்

வந்த பேருந்தில் மக்கள்
வாசலில் நெருங்கி நிற்க
சுந்தர தமிழ் மாதொருத்தி
துணையின்றி உள் நுழைய
மந்தி போல் நின்ற வம்பன்
மாதினை பின்னால் தீண்ட
அந்தமில் அழகி மெல்ல
அங்கொரு ஊசி கொண்டு
நிந்தனை செய்தான் பின்னே
நெருடினாள் அவ் ஊசியாலே
நொந்ததால் மிகவும் மூடன்
நோ தாங்காது கதறலுற்றான்.

- விகடகவி.

## இலங்கைக் கடற்பரப்பில் இந்திய றோலர்கள்:

# கடற்படையினர் நடவடிக்கை எடுக்கவில்லை; மீனவர்கள் சட்டத்தைக் கையிலெடுத்தனர்!

## மன்னார் சம்பவம் குறித்து அடைக்கலநாதன் எம்.பி.

வவுனியா,மார்ச்9

இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய றோலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் பகுதி மீனவர்கள் கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், மீனவர்களின் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையே அவர்கள் தாமாகவே சட்டத்தைக் கையிலெடுக்கக் காரணமாக அமைந்துவிட்டது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

கடந்த வாரம் மன்னார் கடற்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து அடைக்கலநாதன் எம்.பி. பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதம் வருமாறு:-

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாவதற்கு முற்பட்ட நாள்களில் மன்னார் மாவட்ட மீனவர்கள் பகல் நேர மீன்பிடிக்கு மாத்திரம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். கரையிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்திலேயே இவர்களால் மீன்பிடிக்க முடியுமென்ற நிபந்தனையிலேயே இவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை இந்திய இழுவைப்படகுகள் நன்றாகப் பயன்படுத்தி மன்னார் கடற்பரப்பிற்குத் தங்களது மீன்பிடித் தொழிலை விஸ்தரித்துக்கொண்டன. இலங்கைத் தமிழ் மீனவர்கள் கடலுக்குச் செல்வதையிட்டுக் கடுமையாயிருந்த இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் கரையிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில் தொழில் புரிவதைக் கண்டும், காணாததுபோல் இருந்தனர்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் நமது கடற்பரப்பில் உலாவருவது பாதுகாப்பிற்குப் பாரதூரமானதென்பது இலங்கைக் கடற்படையினருக்குத் தெரிந்திருக்கவில்லை. இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பரப்பிலுள்ள வளங்களை அழித்து அள்ளிச் செல்கையில் மன்னார் மீனவர்கள் பகல் வேளையில் குறுகிய கால எல்லைக்குள் கடலில் இறங்கி இந்திய மீனவர்களது வலையிலிருந்து வழிந்த மிகுதிகளையே சேர்த்தெடுத்து வர முடிந்தது.

இந்திய இழுவைப்படகுகள் மன்னார் கடற்பரப்பில் அத்துமீறுகின்றன; கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துங்கள். மன்னார் மீனவர்களை இரவு மீன்பிடிக்க அனுமதியுங்களென்று பலமுறை நான் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளேன்; கடிதங்களையும் வரைந்துள்ளேன். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால் இந்தியப் படகுகள் எமது மீன் வளத்தை அள்ளிச் செல்வதில் நன்கு கரை கண்டுவிட்டன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய பிற்பாடு மன்னார் மீனவர்கள் இரவு மீன்பிடிக்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இந்திய இழுவைப் படகுகளால் அவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. இவர்களது வலைகளுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. பிடிபட்ட மீன்களுடன் வலைகள் களவாடப்பட்டன. இவர்களது சிறிய மீன்பிடிப் படகுகள் கூட சேதமாக்கப்பட்டன. இவையனைத்தும் எமது கடல் கண்காணிப்பாளர்களான - காவலாளிகளான - இலங்கைக் கடற்படையினருக்குத் தெரிவிக்கப்பட்டன. இலங்கைத் தமிழ் மீனவர்களுடன் கடும் போக்கைக் கடைப்பிடிக்கத்தான் முடிந்ததே தவிர, வேற்று நாட்டு மீன்பிடிப்படகுகளின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு ஓர் அடிகூட அவர்களால் எடுக்கப்படவில்லை.

இரண்டு, மூன்று மாதங்களின் முன்பு பேசாலை மீனவர்களால் இந்தியப் படகுகள் கரைக்கு இழுத்துவரப்பட்டன. இந்திய உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கையில் இறங்கிய காரணத்தால் படகுகள் விடுவிக்கப்பட்டு பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்குப் பின்னரும் கூட இந்தியப் படகுகளின் அத்துமீறல்களை இலங்கைக் கடற்படையினர் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடற்படையினர் தமது கடமைகளைச் சரிவரச் செய்திருப்பார்களேயாகில், இலங்கை மீனவர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையில் தற்போதைய கைகலப்பு ஏற்பட்டே இருக்காது.

இந்நிகழ்வுக்குப் பிற்பாடும் கூட இலங்கைக் கடற்படையினர் வாழாவிருப்பார்களானால் மன்னார் கடற்பரப்பை சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தி மீனவர்கள் இனிமேலும் சச்சரவுக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சண்டிலிப்பாயில் 50 பயனாளிகள் வீட்டுத்தோட்டச் செய்கை

## யுனிசெவ் உதவியுடன் திட்டம்

சண்டிலிப்பாய்,மார்ச்9

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்வளை கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகள் யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் வீட்டுத்தோட்ட மரக்கறிப்பயிர் செய்கை மேற்கொண்டுள்ளனர்.

போஷாக்கு நிறைந்த மரக்கறி வகைகளை மக்கள் பெறுவதற்காகவும், நச்சுத்தன்மை எதுவும் இல்லாத இரசாயன கிருமிநாசினிகள் எதுவும் பயன்படுத்தப்படாத - மரக்கறி உணவு வகைகளை பெறுவதற்காகவும் இந்த வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் மேற்பார்வையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

உரத்திற்குப் பதிலாக இயற்கைப் பசளைகள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், இரசாயனக் கிருமிநாசினிக்கு பதிலாக உள்ளிக் கரைசல் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வீட்டுத் தோட்ட செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கும் ஏனையோருக்கும் - பாடசாலை மாணவர்களுக்கும் இது தொடர்பான பயிற்சிகள் சில்லாலை கமநல சேவை கேந்திர நிலைய விவசாய போதனாசிரியரினால் அண்மையில் வழங்கப்பட்டன.

இதேவேளை - இந்த வீட்டுத்தோட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தேசிக் கன்றுகள் (எலுமிச்சங்கன்றுகள்) இவ் வாரம் வழங்கப்படவுள்ளன. பயனாளிகளுக்கு வேலிக்கு கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-135)

## நாளை

மாசி 26
திங்கட்கிழமை
(10.03.2003)
திதி : ஸப்தமி
முன் இரவு 8.57 வரை.
நட்சத்திரம: ரோகினி
பின் இரவு 3.11 வரை.
சுபநேரம் : 12.24 - 1.54
ராகுகாலம்: 7.54 - 8.24
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

தகுதி இல்லாதவனைப் புகழ்தல் கள்ளச் சந்தையில் ஒரு பொருளை விற்பதற்குச் சமம்.

# பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

## காணி அன்பளிப்புச் செய்யுமாறு கோரிக்கை

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் -

இதற்கு தேவைப்படும் இரண்டு பரப்பு காணியை மக்கள் அன்பளிப்பு செய்யும் பட்சத்தில் இதற்கான கட்டட வேலைகளை மேற்கொள்ள முடியும் என்றும்- மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

நோய்த்தடுப்பு, சுகாதாரம், சிறுவர்களுக்கான கிளினிக், கர்ப்பிணி தாய்மாருக்கான கிளினிக், நோய்த்தடுப்பு ஊசியேற்றுதல், சத்துணவு வழங்கல் போன்ற மக்களுக்கு மிகவும் பிரயோசனமான பல்வேறு விடயங்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் கிராம மட்டத்தில் மேற்கொள்ள முடியும் என்றும் -

நலன் விரும்பிகள், பொதுநல அமைப்புகள் ஆகியோர் இரண்டு பரப்பு காணியை அன்பளிப்பாக பெற்றுக்கொடுத்தால் அதில் நிலையத்தை நிறுவக்கூடியதாக இருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-135)

## வண்ணை பண்ணையில் வருவீரே!

கண்ணப்பன் அன்பினை காட்டி வைத்தீர்;
காலனை காலால் உதைத்து நின்றீர்;
பெண்ணவள் வந்தியின் பிட்டை உண்டீர்;
தில்லையின் சிடமாய் வந்திருந்தீர்;
விண்ணவர் வாழ்வு மேல் வையுற
வித்தினை உண்டாக்கி வைத்தீரா;
வண்ணை பண்ணையர் அன்பு கொள்ள
வாகனம் பிசையுடன் வருவீரே!

- வே. குமாரசுவாமி - காரைநகர்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பத்தாம் திருவிழா இன்று)

# ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் - முகமாலை இடையே சேவையில் ஈடுபட்ட மினி பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட ஆபரணம் ஒன்று சவகச்சேரியில் உள்ள தென் மராட்சி தனியார் பஸ்சேவைகள் சங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதனைத் தவறவிட்டவர்கள் சங்க அலுவலகத்தில் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத் தலைவர் மெ.அற்புதராசா கேட்டுள்ளார்.

(ஒ-117)


புங்குடுதீவு மேற்கு பெருங்காடு
"மதுரையம்பதி" சிவன்கோவில்
வருடாந்த மகோற்சவம்

மாசி மாதம் 25 ஆம் திகதி இன்று (9.3.2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்கள் காலை, மாலை விழாக்கள் நடைபெறும்.

17.3.2003 பகல் 10.00 மணி தேர்த்திருவிழா
18.3.2003 பகல் 10.00 மணி தீர்த்தத்திருவிழா
19.3.2003 இரவு திருக்கல்யாணம்

அடியார்கள் வந்து அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

மதுரையம்பதி
சிவன் தேவஸ்தானம்,
புங்குடுதீவு-3.
T.P.: 0777 243243 (15076)

சிவஸ்ரீ ஸ்ரீநிவாசநாகேந்திரக்குருக்கள்
– தர்மகர்த்தா –

(15076)


## 'யாழ்ப்பாண வரலாறு' டச்சு மொழியில் வெளிவரும்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்ப்பாண வரலாற்றினை டச்சு மொழியில் வெளியிடுவதற்கு நெதர்லாந்து நாட்டின் நூல் வெளியீட்டகம் ஒன்று முன்வந்துள்ளது.

இது தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கென குறிப்பிட்ட வெளியீட்டகத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது. இக்குழுவினர் இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டுள்ளதுடன், யுத்த காலத்துக்கு முன்னான யாழ்ப்பாணம் தற்போதைய யாழ்ப்பாணம் பற்றிய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களையும் திரட்டி வருகின்றனர்.

'யாழ்ப்பாண வரலாறு' எனும் இந்த நூல் ஆண்டின் இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

(எ-10)

## அனுமதியின்றி கள் விற்றோருக்கு அபராதம்!

யாழ்ப்பாணம்,மார்ச்9

அனுமதிப் பத்திரம் இன்றி கள் விற்பனையில் ஈடுபட்டமை, வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேல் கள் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் நால்வருக்கு யாழ்.நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், கல்வளை வீதியைச் சேர்ந்த சின்னவி சண்முகராசா என்பவருக்கு 250 ரூபாவும் -

நாவாந்துறை, கடற்கரை வீதியைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை தவராசா என்பவருக்கு 500 ரூபாவும் -

கொக்குவில், பிடாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து நல்லையா என்பவருக்கு 500 ரூபாவும் -

எஸ்.செல்லமுத்து என்பவருக்கு 500 ரூபாவும் தண்டப்பணமாகச் செலுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஜ-10)

## மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்9

முன்னாள் அதிபர் முடீரமேஸ்வரன் ஞபகார்த்த சபை, திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாட்சி விதப்புரை மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு மனித மேம்பாட்டு உதவி வழங்கும் வைபவமும், வானொலி நாடக எழுத்தாளர் கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையை கௌரவிக்கும் நிகழ்ச்சியும் அங்கு இடம்பெறும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், சமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக ஆணையாளர் நா.குழந்தைவேலு, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் மாட்சி விதப்புரைகளை வழங்குவர். (ஐ)


மீண்டும் 10-03-2003 முதல்
சாயி மெடிக்கல் கிளினிக் & அக்கடமி
(ALTERNATIVE MEDICINES & NURSING)

யாழ்.நகரில் மாற்று முறை மருத்துவத் துறையிலும் தாதியப் பயிற்சியிலும் 23 வருடகால சேவை ஆற்றிய "சாயி மெடிக்கல் அக்கடமி" ஸ்தாபனத்தார் மீண்டும் தமது சேவையை ஆரம்பிக்கிறார்கள்.


சிகிச்சைகள்: அக்குபஞ்சர் (சீனமுறை)
அக்குபஞ்சர் (REIKI) (ஜப்பானிய முறை)
ஒஸ்ரியோபதி (OSTEOPATHY)
மெடிக்கல் அஸ்ரொலஜி (MEDICAL ASTOLOGY)
யோகா & மசாஜ் (YOGA & Massage)

Dr.V.P.SUNDARARAJAN Ph.D.(A.M.)
(IBAM/R.M.P. A-9750)
இல.10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (15286)


எம் நெஞ்சத்தில் என்றும் நிலைத்திருக்கும்
எம் அன்புத் தெய்வத்தின்

## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மலர்வு 19 - 12 - 1944



உதிர்வு 01 - 03 - 2000

### அமரர் முருகேசு நடராஜலிங்கம்

*(ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியரும், "இந்திர திடம்", மகாலஷ்சுமி திரை அரங்கம் உரிமையாளரும்)*

*எங்கள் அன்பின் அப்பாவே!*
*அன்பு என்னும் சொல்லுக்கே உங்கள் வாழ்வில் உயிர் கொடுத்தீர்கள்!*
*ஆனால் நீரிழிவு என்னும் கொடியவன் உங்கள் உயிரை எடுத்தானோ?*
*எம் வீட்டின் ஒளி விளக்கு இன்று ஒளி இழந்து தவிக்கின்றது!*
*ஆண்டுகள் மூன்று கடந்தாலும் அணையாத திருமுகமே!*
*காலங்கள் ஓடினாலும் அப்பா உங்கள் நினைவலைதான் ஓடுமா!*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன ஆதரிப்பார் யாருமில்லை!*
*நோய் வந்து படுத்தாலும் நோகதையா எம் உள்ளம்!*
*வேதனையைத் தந்துவிட்டு எங்கு அப்பா சென்று விட்டீர்?*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நிரந்தர முகவரி:
*முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.*
தற்காலிக முகவரி:
*மணியகாரன் சந்தி, தும்பளை.*

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்மார், பேரப்பிள்ளைகள். (15297)

## ஓராண்டு நினைவஞ்சலிகள்

தோற்றம் 18 - 09 - 1939



மறைவு 09 - 03 - 2002

### திருமதி நேசமலர் மனுவேல்

"தாயிலும் சிறந்த தெய்வம் இல்லை"
என்ற இலக்கணத்திற்கு அமைய வாழ்ந்து
காட்டிய எமது தெய்வத்தின்
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*நல்லூர்.*
(15303)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 31 - 01 - 1919



ஆண்டவன் அடியில் 01 - 03 - 2001

### அமரர் கதிரன் முதலி

திதி: 2003-03-09

*ஆண்டு பல ஆனாலும் ஆறாது எம் துயரம்*
*நீண்ட பல நினைவுடனே நினைத்திருப்போம் எந்நாளும்!*

*விடத்தற்பளை - உசன்,*
*மிருசுவில்.* (C/26843)

- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



*09. 02. 2003ஆம் திகதியன்று*
*இறைவனடி சேர்ந்த எமது*
*குடும்பத் தலைவி*

### திருமதி இராசம்மா ஆறுமுகம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து தந்தி, தொலைபேசி, பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து மலரஞ்சலி செலுத்தி துயர் பகிர்ந்தவர்களுக்கும் அனைத்து உதவிகள் செய்து ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், சிரிமந்துக் கூட்டுத்தாபன, காகிதத் தொழிற்சாலை, லிவபூல் ஊழியர்களுக்கும் எங்கள் குடும்பத்தவர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி 11.03.2003 செவ்வாய்க்கிழமை பாம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலையத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

475/6, ELVITIGALLA MAWATTA,
NARAHENPITIYA.
PHONE: 598755 (14996)

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


செல்வம் செழிக்கக்கூடிய
வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்
எட்க்ரோ
கிரீவ்ஸ்
MK 12/ MK 25
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்



புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு, எட்க்ரோ நீர்இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்
ஒரு வருடத்துக்கான உத்தரவாத சான்றிதழ். பலமிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியது. அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர்இறைக்கவல்லது. எரிபொருளை சேமிக்கவல்லது. நாடளாவிய விற்பனைக்கு பிந்திய சிறந்த சேவை. தேவையானளவு உதிரிபாகங்கள்.

EDNA GROUP
எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
1ஏ, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு 04.
தொலைபேசி. 508961 – 2, 502291 – 3, 582135 – 6
தொலைநகல். 584554, 500309
தொடர்புகளுக்கு: பாயுரா – 0777-418821 இபுனு – 0777-418817
RJA

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.க. பரஞ்சோதி

(கிராம அலுவலர்
துன்னாலை தெற்கு J/370)

தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் மக்களின் நலனுக்காக நேர்மையுடன் அயராது எமது கிராமத்தில் 12 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வருவதுடன் மக்களின் நன்மை தீமைகளில் கலந்து மக்களுடன் ஒன்றித்துள்ள,

**திரு.க.பரஞ்சோதி**

அவர்கள் கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மிக மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டுகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று தம் சேவையை நலமுடன் புரியவும் எமது கிராம மக்களுக்கு அவரது சேவை தொடரவும் எல்லாம்வல்ல எம்பெருமான் அருள்புரிவாராக.

துன்னாலை தெற்கு
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

(15336)

# பணிநிலை வேண்டுகை

வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவுமுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

பணிநிலை -
01. கணக்குப் பதிவாளர்
02. களஞ்சியக் காப்பாளர்
03. எழுதுநர்கள்
04. உணவு பரிமாறுபவர்
05. பாதுகாப்புப் பணியாளர்
06. சமையலாளர்
07. விற்பனையாளர் (Hardware, Building Materials, Spair parts)

**கல்வித் தகைமை:**

1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:
க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.

6ஆம் பணிநிலைக்கு:
ஹோட்டல் முகாமைத்துவம் கற்கை நெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.

அகவையெல்லை : 18 - 50
பால்: : ஆண்கள் மட்டும்
பட்டறிவு : 1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6ஆம் பணிநிலைக்கு:
மேனாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
இரும்பகம், கட்டடப் பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

*நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை*

☆ உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
☆ தொலைவிடங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.

வேண்டுகைகள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 15.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.: 1812
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

(C/26801)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட மாணவர்களுக்கான 2ஆம் அரையாண்டு விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ணஐயா அறிவித்துள்ளார். (எ-10)

## வித்துவான் செல்லையா வவுனியாவில் காலமானார்

யாழ்ப்பாணம்,மார்ச்9

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் ஸ்தாபகரும் சங்கத்தின் முதலாவது தலைவருமான வித்துவான் வைரவப்பிள்ளை செல்லையா கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

இளவாலை சித்திர மேழியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'வித்துவான்' பட்டத்தையும், சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தில் 'சைவப்புலவர்' பட்டத்தையும் பெற்ற இவர் சைவ சித்தாந்த மாநாடுகளில் பங்குபற்றியதுடன் சைவசமய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்து வவுனியா, குருமன்காட்டில் வசித்துவந்த இவருக்கு சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த ஆண்டு 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்தது.

இவரது மறைவு குறித்து அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அனுதாபச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. (எ)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் பிடித்து அழிக்கப்படுகின்றன.

சாவகச்சேரி நகரசபையினரும் சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து கடந்த புதன்கிழமை தொடக்கம் இப்பணிகளை ஆரம்பித்துள்ளனர். (எ-117)

## அன்ரன் பொன்னையா 'பிக்கப்' வாகனத்தை கையளித்தார்.

யாழ்ப்பாணம்,மார்ச்9

சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் தலைவர் அன்ரன் பொன்னையா தனது பயன்பாட்டில் இருந்து சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனத்தை பிரதேச சபையின் செயலாளரிடம் நேற்று முன்தினம் கையளித்ததாகத் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய பிரதேச சபைகளுள் ஒன்றான சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகச் செயற்பாடுகள் தடங்கலின்றி - விரைவாக - இடம்பெற வேண்டும் என்ற நோக்கிலேயேதான் வாகனத்தை கையளிப்பதாக அவர் தெரிவித்தார். (ஓ-9)

## கருத்தரங்கு

தென்மராட்சி,மார்ச்9

தென்மராட்சி பிரதேச உணவுச் சாலை உரிமையாளர்களுக்கான சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (எ-117)

# பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



கைதடி மேற்கு J/293 கிராம சேவையாளர்

## திரு.சு.செல்வராசா அவர்கள்

கி.சே. தரம் I இற்குப்
பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு
அவரைப் பாராட்டுவதோடு
அவரின் சேவை தொடர வாழ்த்துகின்றோம்.


கைதடி கிராம மக்களின் மனங்களில் தனக்கென தனியிடம் பெற்றிருக்கும் திரு.சு.செல்வராசா அவர்கள் சமூகசேவை, விவசாய அபிவிருத்தி ஆத்மீக வழிபாடுகள் மற்றும் சிறுவர், முதியோர் உதவிகள், ஆதரவற்றோர், விதவைகளுக்கான ஆதரவு என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவரின் பதவி உயர்வு மக்கள் சேவைக்குக் கிடைத்த மகேசன் தீர்ப்பாகும்.

அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்,
சரஸ்வதி சனசமூக நிலையம்,
சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்.

கைதடி மேற்கு,
கைதடி.

(C-26305)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*பிரபல சமய, சமூக சேவையாளரும்
இளவாலை வட.மேற்குக் கிராம
உத்தியோகத்தருமாகிய*

திருவாளர்

## பொன்னம்பலம் இராசேந்திரம்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுகின்றோம்.

அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற வேண்டும் என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*காடிவளை இந்து இளைஞர் ச.ச. நிலையம்,
ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை,
ஒல்லுடை அறநெறிப் பாடசாலை.*

இளவாலை.

(15344)

# வீடு விற்பனைக்கு உண்டு

பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கை, 56/1, இலக்க வீடு விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*

எஸ்.சபாரட்ணம்
56/1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(15322)

# சம்பளம் வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் 12.03.2003 தொடக்கம் 17.03.2003 வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

பரந்தன்
இரசாயனக் கூட்டுத்தாபனம்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(15319)

# அலுவலக லிகிதர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையம் ஒன்றிற்கு அலுவலக லிகிதர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் சுய கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முகவரிக்கு 13.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

C/o உதயன்,
விளம்பர இலக்கம் - 1815

(15315)

## சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தின கட்டுரைப் போட்டி

**மேற்படி போட்டிக்கான கட்டுரைத் தலைப்புக்கள் பின்வருமாறு:**

★ *"ஈழத்தில் புகழ் பூத்த அறிஞர்களுள் சதாவதானி"*
★ *"சதாவதானியும் அவர் படைத்த அரும் சொத்துக்களும்"*
★ *"நெஞ்சைவிட்டகலாத சதாவதானியின் சைவப் பணிகள்"*

**போட்டி விதிகள்:**

1. கட்டுரை, தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் "ஏ4" தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
2. ஆக்கங்கள் தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக அல்லது தெளிவான கையெழுத்துப் பிரதிகளாக இருத்தல் வேண்டும்.
3. போட்டியாளரின் முழுப் பெயர், விலாசம் என்பன வேறொரு தாளில் எழுதப்பட்டு, ஆக்கத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் சமர்ப்பிக்கப்படும் கட்டுரை "தமது சொந்த முயற்சியிலான ஆக்கம்" எனவும் வெளிப்படுத்தல் வேண்டும்.
4. போட்டி விதிகளுக்கு அமையாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும்.
5. ஆக்கங்கள் 28.03.2003ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ *"செயலாளர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை"* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

செயலாளர்
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையம், பருத்தித்துறை.

(15333)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கணித ஆசிரியர்
கா.லங்கேசன் அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் முத்தையா கார்த்திகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் குழாம்.
யா/புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.

(C/26834)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக
சர்வதேச தலைமையகத்தின் (லண்டன்) ஆதரவில்

வெண்திரையில்

## உலகக் கிண்ண துடுப்பாட்டப்போட்டிகள்

# நேரடி ஒளிபரப்பு

**இடம்: சிவன்கோயில் பர்வதவர்தனி கலாமண்டபம்**
*(பருத்தித்துறை)*

**சுப்பர் சிக்ஸ், அரை இறுதி மற்றும்
இறுதி ஆட்டங்கள்**

**07.03.2003 தொடக்கம் 23.03.2003 வரை.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி-26848) - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

## வட்ட சவாரிச் சங்கம் பொதுக் கூட்டம் 2003

*இடம்* : கதிரமலைச் சிவன் கோயில் முன்றில்,
சுன்னாகம்.

*காலம்* : 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை

*நேரம்* : புதிய நேரப்படி பி.ப.4.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

1. தலைவர் உரை
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. பிறவிடயம்
5. புதிய நிர்வாகசபைத் தெரிவு

(15383) - செயலாளர்.

## கோப்பாயில் சீருடை முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

கோப்பாய் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை பெறுவதற்கான முத்திரைகள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களால் வழங்கப்படுகின்றன என்றும் -

இதுவரை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளாத பிள்ளைகளின் பெற்றோர், பாதுகாவலர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

முத்திரைகள் வழங்கப்படும் கடைசி நாள் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

(எ-6)

## வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்திய எழுத்து மூலமான வினாவிடைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வாய் மூலமான வினாவிடைப் போட்டி யாழ்.மத்திய கல்லூரியில் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் முறையாக வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சி இந்துக்கல்லூரி மற்றும் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம் உட்பட 8 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் கலந்துகொள்வர்.

(எ-9)

## பெருமளவு கள் வீணாகின்றது

ஊர்காவற்றுறை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நாளாந்தம் பெருமளவு கள்ளு விற்பனை இன்றி தேங்குவதால் அவற்றை அகற்றிவருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மாதாந்தம் சுமார் 11ஆயிரம் போத்தல் கள்ளு வீணை அகற்றப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (எ-16)


## அழகுக் கலை வகுப்புகள்

பிரபல அழகுக் கலை நிபுணர் திருமதி பிறேமா ஜெகன் (Diploma in India), 31A, MARY'S ROAD, COLOMBO - 4 அவர்களினால் நடத்தப்படும் விசேட அழகுக் கலை வகுப்புகள் எதிர்வரும் பங்குனி மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) மானிப்பாய், யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் பிரதான மண்டபத்தில் காலை 10மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும். மதியபோசனமும் வழங்கப்படும்.

• 15, 16-03-2003 ஆகிய இரு தினங்களிலும்

- **Bleaching ( 2 Types)**
- **Facial (3 Types)**
- **Waxing**
- **Eye brow Thrading**
- **Saree Tasseling**
- **Saree Plaating**
- **Hair Styles**

இந்து, கிறிஸ்தவ முறைகளுக்கேற்ப மணப் பெண் அலங்காரம் ஆகியன கற்பிக்கப்படும்.

*தொடர்புகளுக்கு:*

அதிபர்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.

காவேரி மெடிக்கல்
கொக்குவில் சந்தி,
கொக்குவில், யாழ்ப்பாணம். (15363)

தொலைபேசி இல.-
01-504983, 01-595536, 072-883877 (கொழும்பு)


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 28**

நாளை (10.03.2003) நடைபெறவுள்ள இலங்கை - இந்திய ஆட்டங்களில் சனத்தும் சச்சினும் சதம் அடிப்பார்களா?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (10.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 28, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.




### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்


**'அருண்ஸ்' தரும் பரிசு - 01**

அரை இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகும் நான்கு அணிகளும் எவை?

1)........................ 3)........................
2)........................ 4)........................

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை திங்கட்கிழமை (10.03.2003) நண்பகல் 1மணிக்குள் 'அருண்ஸ்' தரும் பரிசு - 1, உதயன் பணிமனை, 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.




### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு

# தமிழரின் உள்ளக சுயநிர்ணயம் மதிக்கப்படுவதே தீர்வாகும்!

## பொதுநலவாய அமைப்பின் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்9

தமிழ்மக்களுடைய உள்ளார்ந்த சுயநிர்ணயம் மதிக்கப்படுவதே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

- இவ்வாறு தெரிவித்தார் பொதுநலவாய நாடுகளின் செயற்திட்டத்தின் 'சுதேசிய மக்களின் உரிமைகள்' பிரிவின் பெண் அதிகாரி கலாநிதி ஹெலெனாவோல்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் "சுயநிர்ணயம் - அதன்பரிமாணமும் பிரயோகமும்" என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. முரண்பாட்டுக்கற்கைக்கான பேர்கோவ் நிறுவன இலங்கைக்கிளை ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கு மரியோ சோயஸ் தலைமையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் கலாநிதி ஹெலெனாவோல் உரையாற்றுகையில தெரிவித்ததாவது:-

வரலாற்று பாரம்பரியம், கலாசாரம், மதம், மொழி மற்றும் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு போன்றவற்றை தனித்துவமாகக் கொண்ட ஓர் கூட்டத்தை மக்கள் இனம் என்று ஐ.நா. சாசனம் வரையறுத்துள்ளது. இனமொன்றுக்கான உரிமைகளை அதன் அரசு மறுக்கும் போது சுயநிர்ணயம் குறித்து பேச அந்த இனத்துக்கு அருகதை உண்டு. இந்தச்சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவான - உள்ளக மற்றும் வெளியக சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான - பிரகடனத்தை 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழ்மக்கள் முன்வைத்தார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் காலனித்துவ ஆட்சிக்காலத்திலேயே சுயநிர்ணயம் தொடர்பாகப் பேசப்பட்டது.

ஆனால், இலங்கை அரசுகளும் காலனித்துவ அரசுகளைப்போலவே நடந்துகொண்டன.

சுயநிர்ணய உரிமை என்பது வெறும் கோட்பாடு மட்டுமல்ல. அதுவே மனித உரிமையாகவும் கருதப்பட்டது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த உரிமை மறுக்கப்படும் போது ஏனைய உரிமைகளைப் பாதுகாப்பது சாத்தியமல்ல.

1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற அரசு - புலிகள் பேச்சுக்களின் போது புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தனிநாட்டுக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யத்தயாராக உள்ளதாகவும் - பொருத்தமான மாற்றுத்தீர்வுகளை எதிர்பார்த்ததாகவும் - கூறினார்.

ஆனால், அப்போது பொருத்தமான மாற்றுத்தீர்வுகள் முன்வைக்கப்படாமையினால் பேச்சுக்கள் முறிவடைந்தன.

கடந்த வருட மாவீரர் தின உரையில் பிரபாகரன் உள்ளக சுயநிர்ணயம், வெளியக சுயநிர்ணயம் தொடர்பான கருத்துக்களை முன்வைத்ததானது, சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டை புலிகளுக்கு சாதகமாக்கியது.

இவ்வாறு ஹெலெனாவோல் தெரிவித்தார்.

அங்கு கருத்துரையாற்றிய ஹொங்கொங் பல்கலைக்கழகப் பேராசிரியர் யாஷ்கய் கூறுகையில் தெரிவித்ததாவது:-

உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளியக சுயநிர்ணய உரிமையின் நிழலிலேயே தங்கியிருக்கும். உள்ளக சுயநிர்ணய உரிமைகளைப் பெற முயன்று தோற்றுப்போவது, வெளியக சுயநிர்ணய உரிமையைப் பெற ஆதரவாக இருக்கும். வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும்போது, அதாவது பிரிந்து சென்று தனிநாட்டை அமைக்கும்போது அதன் நன்மை தீமை குறித்து ஆராயவேண்டும். அந்த நிலைமை நிரந்தரமாகவே பிரச்சினையைத் தீர்த்துவிடுமா என்பதில் நடைமுறைச்சாத்தியமற்ற நிலைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனாலேயே சர்வதேச நாடுகள் அதனை ஆதரிப்பதில்லை. வெளியக சுயநிர்ணயம் தனியே சட்டரீதியாக அணுகப்படும் விடயமல்ல.

உள்ளக சுயநிர்ணயம் பெருமளவு நெகிழ்ச்சிப்போக்கைக் கொண்டுள்ளது. வெவ்வேறு தீர்வுகளை எட்டுவதற்கும் அங்கு இடமளிக்கப்படுகிறது.

- இவ்வாறு பேராசிரியர் யாஷ்கய் கூறினார். (ஒ-9)



ஸ்ரீ மயூராபதி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவுப் பெருவிழாவின் போது வே.செல்வநாயகம் அவர்களின் சமய சமூக சேவையைப் பாராட்டி தென்னிந்தியத் திரைப்பட நடிகர் சரத்பாபு சிறப்பு விருது வழங்கி கௌரவித்தார். சபரிமலை சாஸ்தாபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 'ஜெயஸ்ரீ' திட்டத்தில் பரிசு வென்றவர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்9

2002ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெய்ஸ்ரீ பரிசுத் திட்டத்தில் பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கும், 'வனிதா வாசனா' 2002 பரிசுத் திட்டத்தில் பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்குமான பரிசுகள் அந்தந்தக் கிளைகளில் வைத்து நேற்று சனிக்கிழமை வழங்கப்பட்டதென மக்கள் வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

பரிசு பெற்றோரின் பெயர், கிளை விவரம் வருமாறு:-

*ஜெயஸ்ரீ-3 தங்கக் காசு பரிசு*

பி.விக்ரர், திருமதி சுவங்கினி, திருமதி எம்நவரட்ணம், எஸ்.வி.முருகேசு, ஆர்.யோகேந்திரன், திருமதி இராசமணி (யாழ்பிரதான வீதி), எஸ்சிவபாதலிங்கம், எஸ்.தனபாலசிங்கம் (அச்சுவேலி), செல்வி.ரி.கணேசானந்தன், சி.ஜெயசுந்தரம், ரி.ஜெயநாதன், திருமதி, ஜெயநாதன்(சுன்னாகம்), எஸ். முத்துலிங்கம், திருமதி ரூபராணி (சாவகச்சேரி) எம்கே.கந்தசாமி (சங்கானை), ஏ.தியாகராசா (ஊர்காவற்றுறை), எம்ஈ. தியாகராஜ்(கன்னாதிட்டி).

*ஜெயஸ்ரீ-3 தங்கக்காசு பரிசு நவம்பர் 2002*

பி.திலீபன், திருமதி புஸ்பா, எம்.எஸ்.தெய்வேந்திரன்(சங்கானை), வி.நடராசா, என்.அன்னலட்சுமி, ஏ.சுப்பிரமணியம் (காங்கேசன்துறை), பி. நல்லதம்பி (ஸ்ரான்லி வீதி), எஸ். செல்வதீசன், (பருத்தித்துறை), என். குருக்கள், திருமதி.எஸ்சர்மா (யாழ்பல்கலைக்கழகம்), கே.சுப்பிரமணியம் (கன்னாதிட்டி), செல்வி கே.ராஜினி (அச்சுவேலி).

*ஜெயஸ்ரீ-3 தங்கக்காசு பரிசு டிசெம்பர் 2002*

எஸ்.ரோமியவரன், எஸ்.வேல்முருகன் (கன்னாதிட்டி), ரி.வேலுப்பிள்ளை, திருமதி ஏ.திருநாவுக்கரசு, எஸ்.சுப்பிரமணியம், வி.மகாலிங்கம் (சாவகச்சேரி), பி.நாகரத்தினம், எஸ்.சோமசுந்தரம், ரி.விஜயகுமாரன் (ஸ்ரான்லி வீதி), எஸ்.முருகேசு, செல்வி ஆர்.டயானா (பிரதான வீதி), ரி.தியாகராசா (அச்சுவேலி) கே.சுவாமிநாதன் (சங்கானை), வி.மூர்த்தி, திருமதி என்மூர்த்தி, வி.விநாயகமூர்த்தி (சுன்னாகம்).

*- வனிதா வாசனா-2002 தங்கக் காசு பரிசு*

செல்வி கே.கனகலிங்கம், செல்வி ஆர்.இராசதுரை (சாவகச்சேரி), செல்வி ஐ.அமிர்தலிங்கம், செல்வி எம்.எம்.ஆர். ஆரோக்கியராணி, செல்வி ரி.ஜெயந்தினி, செல்வி எஸ்.சுப்பிரமணியம், (யாழ் பல்கலைக்கழகம்), திருமதி ஆர்.இராமச்சந்திரன், செல்வி ரி.கிருஷ்ணசாமி, திருமதி கே.சுப்பிரமணியம், திருமதி அருட்செல்வசேகர் (கன்னாதிட்டி), செல்வி ஜே.இரத்தினசிங்கம் (காங்கேசன்துறை), திருமதி பி.யோகராசா (பருத்தித்துறை) திருமதி எஸ்.ஸ்ரீதர் (நெல்லியடி), திருமதி எஸ்.அன்னப்பிள்ளை, திருமதி ஜி.நாகநந்தினி (யாழ்.பிரதான வீதி), திருமதி கே.சகுந்தலாதேவி (அச்சுவேலி).

(ம)

# பேராதனை பகிடிவதை குறித்து உயர்மட்டத்தில் விசாரணைகள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பகிடிவதை குறித்து உயர்மட்ட விசாரணைகள் மேற்கொளஎப்படுகின்றன. விசாரணைகளில் குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கபில குணசேகர தெரிவித்திருக்கின்றார்.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீட புதிய மாணவர்கள், சிரேஷ்ட மாணவர்களினால் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டதில் ஐந்து மாணவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் இருவர் மாணவிகள். அனைவரும் பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த 4 ஆம் திகதிமாலை இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இச்சம்பவம் குறித்து தெரிவித்திருக்கும் உபவேந்தர் விசாரணைகள நடைபெற்றுவருகின்றன எனவும் சட்டதிட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியிருக்கிறார்.

பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து பேராதனைப் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஐ)

# ஜே.வி.பியுடனான எமது கூட்டு வேறு: சமாதானம் பற்றிய நிலைப்பாடு வேறு

## பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம கூறுகிறார்

"மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. சமாதானத்திற்கு நாம் விரோதமானவர்கள் அல்லர். கௌரவமான சமாதானத்திற்கு என்றும் நாம் ஆதரவளிப்போம். சிலர் ஜே.வி.பியுடன் கூட்டு வைத்துக் கொள்வதையும், சமாதானம் தொடர்பான எமது நிலைப்பாட்டையும் முடிச்சுப்போட முனைகின்றார்கள்" என்று பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியுடனான கூட்டுக்கும் எமது நிலைப்பாட்டுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இனப்பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கப்படவேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

ஆனால், இன்றைய சமாதானப் பேச்சு, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற போர்வையில் நாட்டை அரசு பாதாளத்திற்குத் தள்ளுகின்றது. புலிகள் பல யுத்தநிறுத்த மீறல்களைச் செய்துள்ளனர். இவ்வாறு யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுவதன் மூலம் மீண்டும் ஒரு யுத்தத்திற்குச் செல்ல அவர்கள் முனைகின்றார்கள். அதற்காக அவர்கள் தங்களை தற்போது ஆள்கள், ஆயுதரீதியில் பலப்படுத்திக்கொண்டு வருகின்றார்கள்.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. ஆனால், புலிகள ஒரு பாரிய யுத்தத்திற்கு தம்மை தயார்ப்படுத்தி வருகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மீறி புலிகள் பலதடவைகள் ஆயுதம் கொண்டுவந்துள்ளனர். கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபடுகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதோடு, அதில் சில இறுக்கமான திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு சரத் அமுனுகம தெரிவித்தார். (ஐ)

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் ஊர்திப்பவனி, அஞ்சலிக் கூட்டம்

வடமராட்சி,மார்ச்9

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்பட ஊர்தி ஊர்வலமும் மூன்றாம் வருட நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி ராஜலஷ்சுமி திரையரங்கில் சட்டத்தரணி இ.உருத்திரா தலைமையில் நடைபெறும்.

அல்வாய் மாவடிச்சந்திப் பிள்ளையார் கோவிலிலிருந்து வதிரிச்சந்தி ஊடாக மண்டபம் வரை மாமனிதர் குமாரின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

மண்டபத்தில் வைத்து மாமனிதர் குமார் பொன்னம்பலம், அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசிகர், கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனிதாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகள் உரையை நிகழ்த்துவர்.

(எ-173)

# இலங்கை மின்சாரசபை ஊழியரின் கோரிக்கைகள் குறித்து ஆராயக்குழு!

## பூரண அதிகாரத்துடன் நியமிக்க அரசு முடிவு

இலங்கை மின்சார சபையின் மூன்று தொழிற்சங்கங்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பூரண அதிகாரம் கொண்ட உயர்மட்டக்குழு ஒன்றை நியமிப்பது என அரசு தீர்மானித்திருக்கிறது.

அக்குழு 60 நாள்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்படும்.

மின்சாரசபையின் மூன்று தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதற்கு மத்தியிலேயே அரசு இத்தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறது.

இத்தீர்மானத்தை கவனத்தில் கொண்டு மீண்டும் கடமையில் ஈடுபடுமாறு மின்சக்தி, எரிசக்தி அமைச்சு மின்சாரசபை ஊழியர்களைக் கோரியிருக்கிறது.

மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும் நாடு முழுவதிலும் மின்சார விநியோகம் சீராக நடைபெறுவதாக மின்சாரசபை அறிவித்திருக்கிறது. (ஐ)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரசு தரப்பு சாட்சியமாக ஏற்க மறுப்பு!

## வெலிக்கடை விசேட மேல்நீதிமன்றம் தீர்ப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் எதிரி ஒருவரினால் அளிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று வெலிக்கடை விசேட மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

மகாலிங்கம் முரளீதரன் என்பவர் மீது, காலஞ்சென்ற நீலன் திருச்செல்வம் எம்.பி.பற்றிய தகவல்களை சேகரித்து புலிகளுக்கு வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தமது சொந்தக் கையெழுத்தில் - பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் முன்னிலையில் - தமிழில் - எழுதிய ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியமாக அனுமதிப்பதா? இல்லையா? என்பது பற்றிய விசாரணையின் முடிவில நீதிபதி சுனில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டத்திற்கு அமைவாக பொலீஸாரால் எதிரியிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டிருக்கவில்லை. வாக்கு மூலம் அளிப்பதற்கு, எதிரிக்கு சுயமாகவும், சுதந்திரமாகவும் சிந்தித்து முடிவு எடுப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ஒன்றரை மணிநேர அவகாசம் போதுமானது அல்ல என்றும் நீதிபதி கூறினார்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் நிராகரித்ததையடுத்து, எதிரிக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அரச தரப்பில் எஞ்சியுள்ள சாட்சியம் போதுமானது அல்ல என்று தெரிவித்த எதிர்த்தரப்பு சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, எதிரி விடுதலை தொடர்பாக அரச சட்டவாதி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சங்கேத குறியீடுகளைக் கொண்ட சில தகவல் தாள்கள் மாத்திரமே இந்த வழக்கில் அரச தரப்பு சான்றுப் பொருளாக எஞ்சியிருந்தன.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் இந்த சான்றுப் பொருள்கள் தனியாகத் தாக்குப் பிடிக்க முடியாது என்றும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வாதிட்டார்.

எதிரி தரப்பின் கோரிக்கை பற்றி பரிசீலித்து முடிவுசெய்வதற்கு குறுகிய கால அவகாசத்தைத் தாம் கோருவதாக அரச சட்டவாதி எம்.நவவி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிரியை விடுதலை செய்வது பற்றி தீர்மானிப்பதற்காக வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் எதிரி தரப்பில் - எதிரியின் சாட்சியத்துடன், எதிரியு டன் சேர்ந்து ஒரே கூண்டில் கல்கிசை பொலீஸ் நிலையத்தில் சம காலத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த - இப்போது களுத்துறை - சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் - ஆனந்தநாதன் அந்தோனிதாஸ என்பவரின் சாட்சியம் முன்வைக்கப்பட்டிருந்தது. (எ)



# பெற்றோர்களே !

உங்கள் குழந்தை 2+ முதல் 6 வயதுக்குட்பட்டவரா ?
இதோ! அவரின் ஆங்கில மொழி அறிவை வளர்க்க
அரியதோர் சந்தர்ப்பம்.

முற்றிலும் ஆங்கில மொழியில் ஆனால் தமிழ் மொழி ஓர் கட்டாய பாடமாக உள்ளடக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை நெறிகள்:

கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை

- **Play Group**
  (For Kids from 2+ to 3+ Years of age)
- **Montessori School**
  (For Kids from 3+ to 4+ Years of age)
- **Pre - School**
  (For Kids from 4+ to 5+ Years of age)

**அனுமதியை இப்போதே பெறுங்கள்**

வடமாராட்சி, தென்மாராட்சி, வலிகாமம் போன்ற தூர பிரதேச குழந்தைகளுக்காக ;
சனி அல்லது ஞாயிறு தினங்களில்

**Saturday Prep-School 9.00 a.m. - 4.00 p.m.**
அல்லது
**Sunday Prep-School 9.00 a.m. - 4.00 p.m.**

கிழமை நாட்களில் மற்றைய சிறார்களுக்கு கற்பிக்கப்படும் **Play Group, Montessori, Pre-School** பாடவிதானங்கள் **Saturday Prep-School** இலும் **Sunday Prep-School** இலும் பூர்த்தி செய்யப்படும்.

வாரத்தில் ஒரே ஒரு நாளில் மட்டுமே மேற்குறிப்பிடப்பட்ட பாட நெறிகள் நடாத்தப்படும்

*The entire programme will be taught using the English Language; Tamil will be taught as a separate subject*

குடாநாட்டு குழந்தைகளுக்கான விசேட சலுகையாக மாதம் 500/= மட்டுமே

பிரசித்தி பெற்ற **AMI Montessori** கற்பித்தல் முறை.

கற்பித்தல் மொழி முற்றுமுழுதாக ஆங்கிலத்தில்.

# ஆங்கில மொழி பாட நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**TOEFL** 6 MONTHS
TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE

**IELTS** 6 MONTHS
INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM

- **Certificate in English** — 6 MONTHS
- **Diploma in English** — 6 MONTHS
- **Advanced Diploma in English** — 6 MONTHS

## சிறுவர்களுக்கான ஆங்கில மொழி பாட நெறிகள்

5+ முதல் 14 வரை

- Level 4 — **Upper Intermediate** — 6 MONTHS
- Level 3 — **Intermediate** — 6 MONTHS
- Level 2 — **Lower Intermediate** — 6 MONTHS
- Level 1 — **Foundation** — 6 MONTHS

# BRITISH BUSINESS SCHOOL

JAFFNA CITY CAMPUS: 140, Temple Road, Jaffna.
JAFFNA KACHCHERI CAMPUS: 174, Kandy Road, Jaffna.

# மானம் காத்தார்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யேறியது முதல் ஆட்டம் சோபை இழந்தது. விக்கெட்டுக்கள் மழமழ வெனச் சரிந்தன. மீண்டும் ஒரு தடவை நடுவரிசை ஆட்டக்காரர்கள் காலை வாரினார்கள். ஜெயவர்த்தனாவை இன் னும் ஏன்தான் அணியில் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ? இந்தியாவு டனும் அவர் அணியில் இருந்தால் தோல்வி நிச்சயம்.

இலங்கையின் மானம் காத்தவர் அரவிந்த. அதற்கு வழிசமைத்துக் கொடுத்தவர் ஹைடன். எந்த ஓட்ட மும் எடுக்காமல் அரவிந்த கொடுத்த பிடியை அவர் தவறவிட்டார். விளைவு 92 ஓட்டங்களைக் குவித்தார் அர விந்த. அத்தனை அழுத்தத்தின் மத்தியிலும் அவர் அடித்த சிக்ஸர்கள் மகா அற்புதமானவை. 15 ஓவர் களுக்குள் 4 விக்கெட் இழப்பு. 25 ஓவர்களைத் தாண்ட முன்பே தோல்வி நிச்சயம் என்று தெரியும். ஆனால், கௌரவமாகத் தோற்க வேண்டும் என்பதே இலங்கைக்கு இருந்த கவலை. 47.4 ஓவர்களில் எல்லாம் முடிந்தாயிற்று. அரவிந்த பெற்றுக் கொடுத்த 92 ஓட்டங்களால் ஒரு வாறு 223 என்ற கௌரவமான இலக் குக்கு நகர்ந்தது இலங்கை. 89 ஓட்டங்கள் பெற்றிருந்த போது அர விந்த அடித்த பந்து நிலத்தில் பட்டு எழுந்ததா? இல்லை மட்டையில் பட்டு நேரே களத்தடுப்பாளரிடம் சென் றதா? பெரும் சர்ச்சைக்குரிய அந்த தீர்ப்பு, அது ஆட்டமிழப்பு இல்லை என்று அறிவித்தார் மூன்றாவது நடுவர். இங்கே மூன்றாவது நடுவர் பற்றி யும் முணுமுணுப்பு ஏற்பட்டது. பொன் டிங் களத்தில் நின்ற டேவிட் ஷெப் பட்டிடம் நேரிலேயே சொன்னார். நான என்ன அப்பனே செய்வது, அது மூன் றாவது நடுவரின் தீர்ப்பு என்பது போன்று கையை விரித்தார் ஷெப் பட். இறுதியில் எல்லாம் முடிந்த போது இலங்கை தோற்றுப் போயிருந்தது. 7 வருடப் பழியைத் தீர்த்த திருப்தி - சந்தோஷம் ஆஸ்திரேலியாவுக்கு. இந்தத் தோல்வியில் இருந்தும் இலங் கையர்கள் மீண்டு வருவார்களா?

- PTP

## ஓய்வு பெற...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தோற்று, எமது அணி மிகவும் மோசமான நிலையில் இருக்கும்போது நான் ஓய்வுபெறும் திட்டம் எதுவு மில்லை.

"பாகிஸ்தான் அணி வீரர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தும் சிரேஷ்ட வீரர்கள் இப்போது அணிக்கு அவசியம் என நான் நம்புகின்றேன். அதனால் ஓய்வு பெறுவது என்ற என முடிவை நான் மாற்றிவிட்டேன்" - என்று அக்ரம் மேலும் தெரிவித்தார். (ம)

## சர்வதேச...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ரன அவுட்' ஆகியபோது பெரிதும் ஏமாற்றம் அடைந்தேன். அதிலிருந்து தான் ஓடி ஓட்டங்களைப் பெறுவது என்று தெரிந்துகொண்டேன்.

"இந்த உலகக் கிண்ணப் போட்டி யில் திட்டமிட்டவாறு நான் நடக்க வில்லை. நான் சந்தித்தவர்களில் சச்சின் டெண்டுல்கரே மிகச் சிறந்த வர் அவருக்குப் பந்து வீசுவது கடினம். ஸ்டீவ் வோவ்வை ஆட்டமிழக்கச் செய்வது மிகச் சிரமம். எந்தச் சூழ் நிலையிலும் தனது விக்கெட்டை அவர் எளிதாகப் பறிகொடுத்துவிட மாட்டார். இங்கிலாந்தின் முன்னாள் தலைவர் ஆதர்டனும் சிறந்த வீரர்க ளில் ஒருவர்" - இப்படி அலன் டொனால்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்தியாவின்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கன் டால்மியாவுக்கு இந்தச் செய்தியை அவர் தொலைபேசி மூலம் அறிவித் துள்ளார்.

இதற்கு முன்னர் எந்த அணியும் நேரமாற்றக் கோரிக்கையை வலியு றுத்தவில்லை, பகல்-இரவு ஆட்டங் கள் ரசிகர்களுக்கு உற்சாகம் அளிக் கும் ஒரு வடிவமாகும். (அலுவலகங் கள், பாடசாலைகள் முடிவடைந்ததும் ஆட்டத்தைப் பார்வையிட பகல்-இரவு ஆட்டங்கள் வசதியானவை) திடீ ரென நேரத்தை மாற்றுவது ஆட்டத் தைப் பார்வையிட பல்வேறு நாடுக ளில் இருந்தும் வந்திருக்கும் ரசிகர் களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத் தும், முடிவுகளைக் காரணம் காட்டி நேரத்தை மாற்றச் சொல்வது நியாய மாகாது, செய்மதித் தொலைக் காட் சிகள் 180 நாடுகளில் இதற்கு முன் னரே நேரத்தைப் பதிவு செய்திருக் கின்றன. ஏராளமான விளம்பரங் களும் அந்த நேரத்துக்காகப் பெறப் பட்டுள்ளன. எனவே திடீரென நேரத்தை மாற்றுவது சாத்தியமாகாது - என்று அல் பாக்கர் கூறியுள்ளார். (ம)

---

### இன்று பூப்புப் புனித நீராட்டு விழா

யாழ். நாச்சிமார்கோயிலடி

சைவப்புலவர், கவிமணி, சிவநெறிக் கலாநிதி

**திரு. இராசையா ஸ்ரீதரன் - திருமதி ஸ்ரீசத்தியபாமா**

தம்பதிகளின் அருந்தவ செல்வப் புதல்வி

**செல்வி ஸ்ரீ.குவலயா**

(மாணவி, வேம்படி மகளிர்)

அவர்களுக்கு,

இன்று (09.03.2003) ஞாயிறு காலை

பூப்புப் புனித நீராட்டுவிழா

மங்களகரமாக நடைபெறுகின்றது.

*ஆசீர்வதிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*68, இராமநாதன் வீதி,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.* (சி-26857)

நல்வரவை நாடும்
- குடும்பத்தினர்.

---

சிவமயம்

### கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

பொங்கல் தினத்தில்

வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

### அறிவித்தல்

எதிர்வரும் 18.03.2003 செவ்வாய் நடைபெறவுள்ள பொங்கல் தினத்தில் வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில, ஏல விற்பனை எதிர்வரும் 11.03.2003 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆலய காரியாலயத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(சி-26862)

இவ்வண்ணம்
பரிபாலனசபையினர்.

---

### தவயோகி வண.தோமஸ் அடிகளாரின்
### வாழ்க்கை வரலாற்றின் கண்காட்சி

❋ யார் இவர்?
❋ செய்த சாதனைதான் என்ன?
❋ நமக்கு இவர் யார்?

விடை காண வந்து பாருங்கள்

இடம் : அருள் ஆச்சிரமம், 5, கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
காலம் : 07.03.03 - 12.03.03
நேரம் : காலை 8.00 - மாலை 8.00

- அதிபர்.

(C/26861)

---

# நினைந்துருகல்

எமது கல்லூரி ஆசிரியர் திரு.பூ.செல்லத்துரை அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் எமது கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வர் செல்வன் செ.கார்த்தீபனின் சகோதரனும் ஆகிய

**செல்லத்துரை மோகனபிரதீபன்**

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம். (15459)

மாணவ முதல்வர் சபை
பொறுப்பாளரும்,
உறுப்பினர்களும்.

---

# மரண அறிவித்தல்

## இரத்தினம் மகாலிங்கம் (வெள்ளை)

*(ஊழியர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம்)*

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் மகாலிங்கம் (வெள்ளை) நேற்று (08.03.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலன் இரத்தினத்தின் அன்பு மகனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் தனுஷா, லோகேஸ்வரன் (கனடா), அனுசியா, லிங்கரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரகுநாதனின் மாமனும் துஜிதரன், ராகவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அன்னங்கை,*
*உரும்பிராய் மேற்கு.* (15462)

தகவல்:
பொ.சுந்தரலிங்கம் (மச்சான்)

---


**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித், சிம்ரன் நடித்த

**அவள் வருவாளா** (ரீலஸ்)

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C/26847)

---

**தேவன்** (ரீலஸ்)

விஜயகாந்த், அருண்பாண்டியன், மீனா நடித்த

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே.)
"U-571"

(C-26838)

---

**லக்ஷ்மி** இணுவில்

இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த

**பகவதி**

தினசரி மூன்று காட்சிகள்
11.00, 2.00, 7.00 (பு.நேரம்)

---

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்

ஸ்ரீகாந்த், ஸ்நேகா நடித்த

**ஏப்ரல் மாதத்தில்** (ரீலஸ்)

தினசரி காட்சிகள் : 1.00, 3.00,7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன்
நாள்களில் 7.00 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம்

நாளைமுதல் சூரியப்பார்வை

(15389)


---

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் செல்லத்துரை மோகனபிரதீபன்

*(பழைய மாணவன், யாழ்.மத்திய கல்லூரி)*

இல.12, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் செல்லத்துரை மோகனபிரதீபன் 07.03.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூதப்பிள்ளை செல்லத்துரை (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி) - சந்திரானந்ததேவி தம்பதியினரின் அன்பு மகனும் கார்த்தீபனின் (யாழ்.மத்திய கல்லூரி, A/L 2003 மாணவன்) அன்புச் சகோதரனும் தேவராசா (பிரான்ஸ்), நவரட்ணராஜா (ஜேர்மனி), மன்மதராசா (பிரான்ஸ்), மகாதேவி (இந்தியா), யோகாதேவி (அமெரிக்கா), யோகம்மா, பாக்கியம் (கனடா), அன்னபூரணம் ஆகியோரின் பெறாமகனும் விவேகானந்தன் (அமெரிக்கா), விபுலானந்தன் (கனடா), விமலன் (ஜேர்மனி), விஞ்ஞான குலசிங்கம் (ஆஸ்திரேலியா), கமலா (ஜேர்மனி), விஜயகுலசிங்கம், செல்வபத்மாவதி, கபிலராஜா, ரகுலராஜா, விமலராஜா (பிரான்ஸ்), ராசேந்திரம், ஆனந்தன் (திருகோணமலை), பாலா, வேவி, செல்வி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் செல்லையா, மாணிக்கம் (லண்டன்), அன்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(15452)

தகவல்:
பூ.செல்லத்துரை
(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)

## திருமதி சரவணமுத்து இராஜேஸ்வரி

யாழ்ப்பாணம், 141/3, கே.கே.எஸ்.வீதி, கோணாந்தோட்டத்தில் வசித்து வந்தவராகிய திருமதி சரவணமுத்து இராஜேஸ்வரி நேற்று (2003.03.08) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கராசா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சாந்த குமாரி (இந்தியா), காலஞ்சென்ற ரகு மற்றும் சந்திரகாந்தா, சூரியகலா, உமாதேவி, மாவீரர் இரவிச்சந்திரன் மற்றும் இராஜேஸ்வரன் (கண்ணன்), இலங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தருமகுலசிங்கம் மற்றும் அற்புதராசா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, செல்வராசா (சாவகச்சேரி) மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசையா, கனகலிங்கம், வீரசிங்கம் மற்றும் நாகரெத்தினம், தருமராசா, தையல்நாயகி, மனோன்மணி, பூபாலசிங்கம், சரஸ்வதி, நித்தியலெட்சுமி ஆகியோரின் மைத்துனியும் தர்சன், நிருசன், தாட்சாஜினி, பார்த்தீபன், டினோசா, சுவஸ்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*141/3, K.K.S. வீதி,*
*கோணாந்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (15460)

தகவல்:
ச.இராஜேஸ்வரன் (மகன்),
த.நாகரெத்தினம் (மைத்துனி).

## சின்னையா துரைசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்சமயம் இருபாலையில் வசித்தவருமான சின்னையா துரைசிங்கம் நேற்று (08.03.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் ஆறுமுகராசா, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற மல்லிகா ஆகியோரின் சகோதரரும் பூபதியின் அன்புக் கணவரும் வாசுகி, ஞானகி, வெங்கடேஸ்வரன், சுமதி, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதேவனின் மாமனாரும் நிதுர்சனா, கபில்ராஜ், பிருதிவிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை அவரின் இருபாலை இல்லத்தில் பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலைச்சந்தி, இருபாலை.* (15461)

தகவல்:
து.வெங்கடேஸ்வரன் (மகன்)

## தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

*(ஓய்வுபெற்ற முதல்வர்)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்கள் 06.03.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் மயில்வாகனம் டாக்டர் - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும் சிராணி (U.K.), சுவேந்தினி (Canada), மகேந்திரன் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணரத்தினம், ஞானசீலன், சுபாசினி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் இராமநாதன், இரத்தினவேல், கலைமகள், இலக்குமிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரோஜினிதேவி, கமலாதேவி, சிவரெட்ணம், கிருஸ்ணகோபால், சண்முகலிங்கம்புறூடி, பஞ்சலிங்கம்புறூடி, சிவபாக்கியவதி ஆகியோரின் மைத்துனரும் சுரன், சுஜனன், ரொசானி, திஷானா ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*இல.06, பாரதி வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (15454)

தகவல்:
தாமோதரம்பிள்ளை சற்குணவதி
(மனைவி)

## நல்லையா சின்னப்பு

*(பிரபல வியாபாரி - கொடிகாமம்)*

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் எருவன், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா சின்னப்பு நேற்று (08.03.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு காலமானார்.

அன்னார் தெய்வானையின் அன்புக் கணவரும் சுந்தரம் (வெற்றிலைக் கடை, கொடிகாமம்), சிவபாக்கியம், அழகபாக்கியம், யோகபாக்கியம், தவபாக்கியம், காலஞ்சென்ற இராமச்சந்திரன், சிவசுந்தரம் (செல்லக்கண்டு) ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அட்டைபறித்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*எருவன், கொடிகாமம்* (C/26864)

தகவல்:
சுந்தரம் (மகன்-வெற்றிலைக்கடை)

'உதயன்' பத்திரிகை விளம்பரப் பொறுப்பாளர்

# விநோதினி கொலை சூத்திரதாரியை உடனடியாகக் கைது செய்யுங்கள்

## நாடாளுமன்ற விவகார அமைச்சர் கோரிக்கை

வெள்ளவத்தையில் கடந்த வியாழன் இரவு படுகொலை செய்யப்பட்ட 'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளின் விளம்பரப்பொறுப்பாளர்களில் ஒருவரான விநோதினி திலீபனின் மரணம் தொடர்பான சூத்திரதாரியை உடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் உள்துறை அமைச்சரிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை நேரில் சந்தித்து இக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானம் மலரச்செய்வதற்காக எமது அரசு பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் வேளையில் இவ்வாறான கொடூரமான சம்பவம் நடைபெற்றிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றும் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் நிலவும் சமாதானச் சூழலில் மக்கள் அச்சமின்றி எந்நேரத்திலும் எங்கும் செல்லக்கூடியதாகவுள்ள இக்காலகட்டத்தில் தம் வீட்டுக்கு அருகிலேயே விநோதினி கொலை செய்யப்பட்டமை பாதுகாப்புத் துறையினருக்கு விடுக்கப்பட்ட பலத்த சவாலாகும் என்றும் அமைச்சர் அஸ்வர் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படுகொலை தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவைச் சந்தித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி கோரினேன் என்றும் -

கொலைச் சூத்திரதாரிகளைக் கைதுசெய்து நீதியின்முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார் என்றும் - அஸ்வர் தெரிவித்தார். (ம-3)

## பேச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வு குறித்து பேசும் கட்டத்துக்கு தற்சமயம் பேச்சு வந்துள்ளது. இதுவரை நடந்த பேச்சுக்களை விட எதிர்காலத்தில் இடம்பெறும் பேச்சுக்களே முக்கியமானவையாக அமையவிருக்கின்றன.

பாதுகாப்பு வலயம், மக்களின் இயல்பு வாழ்க்கை போன்ற விடயங்கள் பேச்சுக்களில் பெரிதாக இடம்பெறமாட்டா. அந்த விடயங்கள் உபகுழுக் கூட்டங்களிலேயே ஆராயப்படவிருக்கின்றன - என்றார் அவர்.(ம-3)

## 8 இந்திய மீனவர் நேற்றுக் கைது! இன்று விடுதலையாவர்

யாழ்ப்பாணம்,மார்ச்9

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவிய எட்டு இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. (ம-3)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் மண்டைதீவு 8ஆம் வட்டாரம் பிள்ளையார் கோயிலடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இலவச கண்பரிசோதனை முகாம் இடம்பெறும். பரிசோதனையின் பின்னர் தேவையானவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகளும் வழங்கப்படும். கண் பரிசோதனையை லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ மேற்கொள்வார். (ம)

## மெய்வன்மை போட்டி

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப்பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் இடம்பெறும் இவ்விளையாட்டுப்போட்டியில் பிரதமவிருந்தினராக ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி செல்வராணி தியாகராசா கலந்துகொள்கிறார். (ம-15)

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் -

கல்விப்பாதிப்புக்கள், நியமனப் புறக்கணிப்பு ஆகியவற்றை விளக்கும் மகஜர்களை பிரதமர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புவதற்காக யாழ்.அரச அதிபரிடம் கையளிப்பது என்றும் - நேற்றைய கூட்டத்தில முடிவு செய்யப்பட்டது.

இப்பேரணியில் யாழ்.மாவட்டத்தின் சகல பாடசாலை ஆசிரியர்கள், பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை ஆசிரிய மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை -

அமைச்சர் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வரும்போது சமீபமாக நின்று அவருக்குக் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கவும் முஸ்தீபு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3-10)

## 83 கலவரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து பெரும்பேரணி ஒன்றை நடத்தவிருக்கின்றன. பேரணியைக் குழப்பி, தமிழ் மக்களுக்குச் சொந்தமான கடைகளைத் தாக்கி குழப்பம் விளைவிக்க ஐ.தே.கவின் ஒரு சாரார் முயற்சி மேற்கொண்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

1983 இல் நடந்த கலவரம் போன்ற கலவரத்தை ஏற்படுத்தி பொதுமக்கள் மீது அந்தப் பழியைப் போட இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே இத்தகைய நிலை ஒன்று ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவும் - என்றுள்ளது.

ஜனாதிபதியின் இக்கடிதத்தை அடுத்து - தேவையான - முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பிரதமர், உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது. (ம-3)

## கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார், ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகமும் முன்னாள் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். பொது அமைப்புகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

இது தொடர்பாக கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்க் கைதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், அச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலும் நீண்டகாலம் தென்னிலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அரசிடமும், சட்டத்துறையிடமும் ஏன் ஜனாதிபதியிடமும் அரசியல், சமூக, மனிதாபிமான அமைப்புகளும், மதத்தலைவர்களும் வேண்டுகோள்கள் விடுத்து வந்தும் கூட தமிழ்ச் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

இந்த நாட்டின் ஆட்சியையே ஆயுத முனையில் கைப்பற்றிட நினைத்து கொலைகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தப் போராடிய மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பி.) மன்னிப்பு - விடுதலை கிடைத்துவிட்டது.

ஆனால், தமிழ்க் கைதிகளை சிறைகளிலேயே கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்கிறார்கள்; கொலையும் செய்தனர். இப்பொழுது நீண்டகாலம் சிறைகளில் வைத்துக்கொண்டு விடுதலை செய்ய மறுக்கின்றனர்.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டு ஓராண்டு முடிந்தும்கூட தமிழ்க்கைதிகள் - பெண்கள் உட்பட - விடுதலை செய்யப்படவில்லை.

சிங்களச் சிறைகளில் தம் விடுதலை கோரி கடந்த ஒரு வாரமாக எம் சகோதரர்களும் சகோதரிகளும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், விடுதலை செய்யவேண்டி வற்புறுத்தியும் எதிர்வரும் (நாளை) திங்கட்கிழமை 10.03.2003 மு.ப. 10.30-11.30 வரை யாழ்.கச்சேரி முன்றிலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, பொது அமைப்புகளின் ஒன்றியம் மற்றும் மனிதாபிமான சக்திகளும் மறியல் போராட்டமொன்றை அடையாளமாக நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

ஆதரவு தந்து பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ம-3)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான நிதியினை திணைக்களத் தலைவர்களோ அல்லது அதிகாரிகளோ கேட்டுப் பெற்றுக்கொள்வதல்லை எனவும் கிடைக்கின்ற நிதியை உரியபடி பயன்படுத்துவதில்லை என்றும் நேற்றைய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சுமத்தி உரையாற்றினர். அவர்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ரவிராஜ் எம்.பி. தனது உரையில் சில கருத்துக்களை வெளியிட்டார்.

தற்பொழுது மட்டுமல்ல கடந்த காலங்களிலும் இவ்வாறே நடைபெற்றுள்ளது. இங்கு வருகை தருகின்ற அமைச்சர்கள் 50 மில்லியன் ரூபா தருகின்றோம் 100 மில்லியன் ரூபா தருகின்றோம் என்று கூறிவிட்டு இறுதியில் தருவது 25 லட்சம் ரூபாதான். இதனை நாம் உணர்ந்து கொள்ளாமல் அரசாங்க உத்தியோகத்தர்கள மீது குற்றஞ்சொல்வதால் எந்தப்பிரயோசனமும் இல்லை. 'யதார்த்த நிலையை உணர்ந்து கொள்ளவேண்டுமே தவிர குற்றம் சுமத்தக்கூடாது - என்று கூறினார் ரவிராஜ்.

அவர் இதனை கூறியபோது கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அதிகாரிகள் சிலர் கைகளைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.

யாழ்.மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் உட்பட சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களுக்கு எதிராக கண்டனத்தீர்மானம் நிறைவேற்றவேண்டும் - எனவும் ரவிராஜ் எம்.பி.கேட்டுக்கொண்டார்.


இக்கட்டத்தில் குறுக்கிட்ட அமைச்சர் மகேஸ்வரன் இது பற்றி நாம் எல்லோரும் நாடாளுமன்றில் கதைப்போம் என்று சமாதானம் சொன்னபோதும், "அதனைப்பற்றி பின்னர் பார்ப்போம்; இன்று கண்டனத தீர்மானம் நிறைவேற்றவேண்டும்" என்று அடித்துக்கூறினார் ரவிராஜ்.

கடந்த ஆண்டு விவசாயம் மற்றும் விளையாட்டுத்துறை ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்களையும் அவர் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

இவை யாவற்றையும் நன்கு அமைதியாகக் கேட்டுக்கொண்டிருநத நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தனக்கு எந்தவொரு அரச அதிகாரி மீதும் தனிப்பட்ட விரோதம் கிடையாது எனவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி கருதியேதான் அதிகாரிகளுடன் கோபமாகப் பேசுவதாகவும் தெரிவித்தார்.

இணைத்தலைவர்களுள் ஒருவரான இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களத்தலைவர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாநகரசபை ஆணையாளர், செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஐ-10)

## World Cup Score card - 2003

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்

**சிங்கர்**

புதிய பார்வை

இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : ஸிம்பாப்வே

ஆட்டநாயகன் : நாதன் ஆஸ்லே

முடிவு : 6 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து வெற்றி

### ஸிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| சி.விஸாட் | c/டைரிஸ் | b/கெய்ன்ஸ் | 30 | 50 | 4 | 0 |
| [illegible] | | b/அடம்ஸ் | 00 | 01 | 0 | 0 |
| ஏ.பிளவர் | run out(ஆஸ்லே) | | 37 | 61 | 5 | 0 |
| ஜி.பிளவர் | c/கெய்ன்ஸ் | b/ஓராம் | 01 | 06 | 0 | 0 |
| ஜி.விட்டல் | c/மெக்கலம் | b/கெய்ன்ஸ் | 00 | 02 | 0 | 0 |
| ரி.தைபு | lbw | b/கெய்ன்ஸ் | 53 | 79 | 3 | 1 |
| ஏ.பிளிங்நட் | run out(மெக்கலம்/விட்டோரி) | | 04 | 05 | 0 | 0 |
| எச்.ஸ்ரீக் | not out | | 72 | 84 | 6 | 2 |
| சீ.ஏர்வின் | not out | | 31 | 14 | 4 | 1 |
| உதிரிகள் | | | 24 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | 252/7 | | | |

களமிறங்காதவர்கள் : டி.ஹொண்டா, ஏ.மேக்பி

பொண்ட் : 10-1-37-0, அடம்ஸ் : 5-0-54-1, ஓராம் : 10-4-28-1, கெய்ன்ஸ் : 4-0-16-2. விட்டோரி : 10-0-52-0, ஹரிஸ் : 10-0-45-1.

### நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| சி.மக்மிலன் | c/தைபு | b/ஹொண்டா | 08 | 16 | 1 | 0 |
| [illegible] | lbw | b/பிளிங்நட் | 46 | 42 | 10 | 0 |
| என்.ஆஸ்லே | not out | | 102 | 122 | 11 | 0 |
| [illegible] | c/பிரெண்ட் | b/பிளிங்நட் | 33 | [illegible] | 1 | 0 |
| சி.கெய்ன்ஸ் | | b/ ஏர்வின் | 54 | 73 | 3 | 2 |
| [illegible] | not out | | 14 | 10 | 3 | 0 |
| உதிரிகள் | | | 16 | | | |
| மொத்தம் | (47.2 ஓவர்கள்) | | [illegible] | | | |

களமிறங்காதவர்கள் : ஏ.அடம்ஸ், பி.மக்குலம், டி.விட்டோரி, ஜே.ஓராம், எஸ்.பொண்ட்.

ஸ்ரீக் : 10-0-59-0, ஹொண்டோ : 8.2-0-52-1, பிளிங்நட் : 10-0-41-2, பிளவர் : 10-0-33-0, விட்டல் : 3-0-19-0, ஏர்வின் : 6-0-44-1.


**பிறைற்றின் கல்வி நிலையம்**

சாவகச்சேரி

புதிய ஓகன் இசை வகுப்பு ஆரம்பமாகின்றது

KEY BOARD CLASS

குறைந்த காலத்தில் நிறைந்த பயிற்சி

ஆசிரியர்: G.ஸ்ரீகுகன்

காலம்: 10.03.2003

திங்கள் மாலை 3.30

(15342)

**தேவை**

பலசரக்கு கடைக்கு விற்பனையாளர் உடன் தேவை.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 151, கே.கே.எஸ். வீதி, (சத்திரசந்தி வீனஸ் டெல்கா முன்பாக)

ஜெயக்குமார் களஞ்சியம்

(15457)

**LIONAIR**

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/26688)

**BRIGHTMAN**

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2004

பௌதிகம்

வெப்பப் பௌதிகம் (HEAT)

BY: ஜெயசீலன்

ஆரம்பம் : 10.03.2003 Mon. 4.00

(15324)

பல வருடங்களின் பின் மீண்டும் யாழ்நகரில்..!

K.R.S. - No. I சம்பா

K.R.S. - No. I றோஸ்நாடு

எல்லா வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.

(15196)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாகநட்சத்திரம், 1972இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப் படங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

ப.கிருஷ்ணமூர்த்தி

மூர்த்தி விளம்பர சேவை

தேவி அச்சகம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

போன் : 2789 (15226)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மட்டரகமான ரசனையிலிருந்து யாழ். மக்கள் விழித்து எழவேண்டும்

**கதாநாயகியைத் துரத்தித் துரத்தி காதலிக்கும் கதாநாயகன். நாய் துரத்தித் துரத்திக் கிழித்த ஆடையை கதாநாயகி அணிந்திருப்பது. அதற்கூடாக விலை போகும் பெண்மை இடையிடையே புளித்த சாம்பார் காதல் டுயட். அடிதடி. டுமீல் டுமீல். திருமணம்.**

**இதுதான் யாழ்ப்பாணத் தமிழரை புற்றுநோயாளிகள் ஆக்கியிருக்கும் தென்னிந்திய சினிமாவின் கேடுகெட்டநிலை. இந்த நிலையில் இருந்து எப்போது தமிழர்கள் விடுபடுவது? அதற்கு ஏதேனும் வழி உண்டா?**

**இப்போது யாழ்ப்பாணத்தில் திரைக்கதை உருவாக்கல் பயிற்சி முகாமை நடத்திவரும் 'ஸ்கிறிப்நெற்' நிறுவனத்தின் திட்ட இயக்குநர் கதரின ஸ்டெட்மனை அனுகிய போது அவர் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு இது.**




பிரித்தானியாவை தலைமையகமாகக் கொண்ட 'ஸ்கிறிப்நெற்' தர்ம ஸ்தாபனம் 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கான நிதி உதவிகளை பொதுநலவாய ஊடக நிதியம், சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை ஊடகத்துறை பயிற்றுவிப்பு நிறுவனம் ஆகியன வழங்குகின்றன.

## 'ஸ்கிறிப் நெற்' இயக்குநர் கதறின் என்ன கூறுகிறார்?

உலகில் எத்தனையோ பேர் கதை சொல்லத் துடித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களை 'ஸ்கிறிப் நெற்' திட்டத்தின் மூலம் ஒன்றிணைத்து அவர்களிடமிருந்து உண்மையான, ஆரோக்கியமான திரைக் கதை வெளிப்பாடுடைய கதைகளைப் பெற்று உலகப் பண்பாட்டுக்குக் கையளிப்பதே இந்த நிறுவனத்தின் நோக்கம்.

எத்தனையோ பேர் அருமையான கதைகளைக் கூறுவார்கள். ஆனால், அத்தனைபேருக்கும் திரைப்பட மொழிக்கூடாக அதனைக் கூறமுடியாதிருக்கும். அவ்வாறான கதைகளைக் கூறக்கூடிய வகையில் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சிறந்த திரைக் கதை எழுத்தாளர்களை உருவாக்க முடியும்.

"1999 அளவில் ஆபிரிக்க தேசத்தில் கானாவில் முதன் முறையாக இதன் தொடக்கம் இடம்பெற்றது.

எங்கு யுத்தங்களும், அழிவுகளும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றனவோ அங்கு அனுபவ வெளிப்பாடுகள் கூறுகின்ற கதைகளில் உண்மை பொதிந்திருக்கும். கானாவில் அத்தகைய உண்மைக் கதைகள் மூன்றினை நான் பெற்றிருக்கிறேன் - என்கிறார் கதரின் ஸ்டேட்மன்.

இதன் அடுத்தகட்டமாகவே கொழும்புக்கு வந்து கானாவில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட அணுகுமுறைகளை இங்குள்ள கதை சொல்லக்கூடியவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். இங்கு சிறந்த சிங்கள திரைப்பட இயக்குநர்களைச் சந்தித்ததன் மூலமும் அவர்களின் திரைப்படங்களை பார்வையிட்டதன் மூலமும் முழு உற்சாகத்துடன் சேர்ந்து இயங்கத் தொடங்கினேன்.

"அப்போதுதான் ஞானதாஸின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அவர் மூலமாகவே யாழ்ப்பாணம் வந்தேன். கொழும்பிலேயே நிறைவு பெற்றிருக்கவேண்டிய இந்தப் பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் வரை இப்போது நீண்டிருக்கிறது.

"யாழ்ப்பாணத்தில் இந்த பயிற்சி முகாமைத் தொடங்கும் போது எத்தனை பேர் கலந்துகொள்வார்களோ என்று நான் யோசித்தேன். ஆனால், 170 பேர் கலந்துகொண்டார்கள். அதிலும் பெண்கள் ஆர்வதுடன் வந்து கலந்துகொண்டமை என்னை மிகவும் ஆச்சரியப்படவைத்தது.

"இவர்கள் எல்லோருமே சிநேகபூர்வமாகவும், விருந்தோம்பலோடும் பழகுகிறார்கள். மிக ஒழுங்காக வருகைதந்து விடயத்தை நன்கு கிரக்கித்துக் கொள்கிறார்கள். சர்வதேச படங்கள்,சிங்கள, இந்திய சிறந்த திரைப்படங்களைப் பார்வையிடாமலேஅர்ப்பணிப்புடன் இவர்கள் ஈடுபடுவதைப் பார்க்கின்றபோது தமது மண்ணின் பண்பாட்டு பாரம்பரியத்தை திரை மொழிக்கூடாக சொல்வதில் எத்தகைய ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவறவிட்டுவிட்டு திரும்பியிருந்தால்..." சொல்ல முடியாமல் தவித்தார்.



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமாதானச் சுருள் 'ஸ்கிறிப் நெற்' திரைக் கதை உருவாக்கலுக்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்டவர்களை இங்கு காணலாம்.

"பயிற்சி முகாமில் காண்பிக்கப்பட்ட சர்வதேச விருது பெற்ற படங்களில் வரும் வன்முறை, பாலுணர்வு, முத்தக்காட்சிகளை ஆண்கள் பார்ப்பதைவிட பெண்கள் தலையைக் குனிந்துகொண்டிருப்பதை நான் அவதானித்தேன். தமது மனதில் தடைகளைப் போட்டு அவற்றிலிருந்து விடுபட முடியாமல் இருக்கிறார்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன். ஏனெனில் தமிழ்ப் பெண்கள் பலரை நான் சந்தித்துள்ளேன். அவர்களின் பண்பாடு, மரபு இதனைச் செய்கின்றது. இத்தகைய தமிழ்ப் பெண்ணின் பண்பாடு 'எழுத்துக்கு ஒரு விலங்கு' என்றே நான் குறிப்பிடுவேன்.

"இருந்த போதிலும் சிறந்த கதைகளை குறிப்பாக சிறிய விடயங்களை எடுத்து பெரிய அளவிலான வடிவத்தைக் கொடுக்கிறார்கள். சுதந்திரமான சிந்தனை கொண்டவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

"இங்கு பெறப்பட்ட கதைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 5 பிரதிகள் இணையத்தளத்தில் சோத்துக் கொள்ளப்படும். இதனைப் பார்வையிடும் தயாரிப்பாளர்கள் சிறந்தவையாக கருதுமிடத்து அவற்றுக்கு திரைவடிவம் கொடுத்து உதவ முன் வருவார்கள். அப்போது இலங்கைப் படைப்பாளிகளே முழுவதுமாக அதில் பங்குகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.



'ஸ்கிரிப் நெற்'
யாழ். திட்ட இணைப்பாளர்
ஞானதாஸ்

"கானாவிலும் பார்க்க இங்கு திரைப்படத்துறையில் ஓரளவு அனுபவம் பெற்றவர்கள் பலர் இருக்கின்றாகள் அதனால் திரைப்படத்தையோ அல்லது குறும் படங்களையோ தயாரிப்பது இலகுவானதாக இருக்கும். இதற்கு இங்கு எழுதப்படும் கதைகள் சர்வதேச திரைப்பட இயக்குநர்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும். அதற்கான முறையினை, பயிற்சியினையே நாம் இப்போது வழங்குகின்றோம்.



"இவ்வாறு தயாரிக்கப்படும் படங்கள் சர்வதேச திரைப்பட விழாவுக்கு அனுப்பிவைக்கப்படும். இதன் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை இலங்கை திரைக்கதை எழுத்தாளர்கள் பெற முடியும்.

அத்துடன் சொந்த நாட்டிலேயே திரைப்படத்துறையில் நுழைந்து தனது தொழிலாக இதனை மேற்கொள்ள முடியும் இந்த நிலை வளர்ச்சியடையும் போது தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரிக்கலாம். ஏன் முழு நீள திரைப்படமாகவே தயாரிக்கலாம். இத்தகைய முழுநீளத் திரைப்படங்கள் உலகம் பூராகவும் பார்க்கக்கூடிய படமாக மொழி, இனம், சமயம் தாண்டிய நிலையில் உலகமக்களின் மனங்களில் ஆழப் பதிந்து நிற்கும்.

"இந்தியத் திரைப்படங்களின் மட்டரகமான ரசனையில் இருந்து யாழ்.மக்கள் விழித்தெழுவதற்கு யாழ்.மண்ணில் இருந்து சிறந்த திரைக்கதை எழுதுபவர்களும் திரைப்பட இயக்குநர்களும் உருவாகவேண்டும். இதற்கான தொடர் உதவிகளை எப்போதும் வழங்கமுடியும்" - என்று தெரிவித்தார் கதறின் ஸ்டேட்மன்.

# ஈழத் தமிழ் சினிமாவின் முகவரி எங்கே?

சினிமா கலை ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் எமது நாட்டில் தனது தடயத்தை இழந்துவிடவில்லை. சர்வதேச அங்கீகார விருதுகளைப் பெற்றுக்கொள்ளும் பல சிங்களப் படங்கள் உருவாகி உள்ளபோது தமிழ்த் திரைப்படங்கள் மட்டும் ஏன் அந்த நிலைக்கு வளரவில்லை...

1950ஆம் ஆண்டிலேயே இலங்கையில் தமிழ்ப் படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. இப்பொழுதுதான் நூறு வயதை எட்டிப் பிடித்திருக்கும் இந்த சினிமாத் துறையில் அரை நூற்றாண்டுக்கு முன்னரே கால் பதித்த தமிழ்ப் படத் தயாரிப்பு முயற்சிகளுக்கு என்ன நடந்தது?

இதற்கான பதிலைப் பிரபல திரைப்பட இயக்குநர் பாலு மகேந்திரா இப்படிக் கூறுகின்றார். "ஈழத்தின் தமிழ் சினிமா மிகமிகப் பின் தங்கிப் போய், இன்றும் அரிச் சுவடிக் கட்டத்திலேயே இருக்கிறது. இந்திய சினிமாவின் குறிப்பாகத் தென் இந்திய சினிமாவின் ஆதிக்கமும், அந்த சினிமாவே தங்கள் சினிமா என்று ஈழமக்கள் கொண்டாடியதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.



ஈழத்தில் தமிழ்ச் சினிமாத் துறையை ஆரம்பித்து வைத்த முன்னோடிகளில் சிலரைப் படத்தில் காண்கிறீர்கள். இடமிருந்து முதலாவதாக ஏ.எஸ்.ராஜா, நான்காவதாக ஹென்றி சந்திரவன்ஸ, ஆறாவதாக எஸ்.தங்கவேலு. ஏழாவதாக அருணன் மாஸ்ரர்.

"சிங்கள சினிமாவின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு அடிகோலியவர்களே தமிழர்கள்தான். சிங்கள சினிமாத் தயாரிப்பிலும் தென்னிந்திய சினிமா விநியோகத்திலும் தங்கள் நேரத்தை முடக்கி லாபம் சம்பாதித்த இலங்கைத் தமிழ் முதலாளிகள், தங்களுக்குக்கென்று ஒரு ஈழத்தமிழ் சினிமாவை - அதன் அடையாள முகவரிகளோடு - வளர்க்கத் தவறிவிட்டார்கள் என்பதுதான் வருத்தமான உண்மை.



ஈழத்தில் தயாரிக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டில் வெளிவந்த முதல் தமிழ்த் திரைப்படம் 'சமுதாயம்'. அதனைத் தயாரித்த சிங்களவரான ஹென்றி சந்திரவன்ஸ

"இவற்றிற்கு மத்தியில், தொழில் நுட்பத்திலும் மீடியா ஆளுமையிலும் மிகச் சாதாரணமாய் இருந்த - ஆனால், ஈழமண்ணின் மணத்தையும் இலங்கைத் தமிழரின் ஆத்மாவையும் ஓரளவு பிரதிபலிக்க முயன்ற - ஒன்றிரண்டு தமிழ்ப் படங்களையும் பார்த்திருக்கின்றேன்.

"சர்வதேச திரைப்பட விழாக்களில் நடுவர் குழு அங்கத்தவனாகவும், விருந்தினராகவும் கலந்துகொண்ட சமயங்களில், அதிகம் மக்கள் தொகையற்ற சினனச் சின்ன நாடுகளிலிருந்து வந்த அற்புதமான படங்களைப் பார்க்கும்போதெல்லாம், இலங்கையிலிருந்து கூட இப்படியொரு படம் - தமிழ்ப் படம் - வரக்கூடாதா என்று நான் அங்கலாய்ப்பதுண்டு.



ஈழத்து சினிமா ரசிகர்கள் பார்த்துப் பழக்கப்பட்ட திரைப்படங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அன்று வெளிவந்திருந்த 'வாடைக்காற்று'. அதிலிருந்து ஒரு காட்சி.

"சர்வதேச கலை இலக்கிய அரங்கில், தமிழ் மொழியின் முகத்தை ஈழத்து எழுத்துக்களே அடையாளம் காட்டப் போகின்றன என்பது உறுதி. அதற்கான ஆரம்ப முயற்சிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதை தமிழ்மக்கள் நன்கு உணரவேண்டும்."

நன்றி 'இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை

## கலைச்சுடர்

தயாரிப்பு:-சத்தியன்

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால்
"எவிடென்ரெ" (EVIDENTE) எனும்
நெதர்லாந்து நிறுவன ஆதரவில்
அமரர் சு.சிறீபாஸ்கரன் நினைவாக நடத்தப்படும்

## கண் பரிசோதனை முகாம்

காலம்: இன்று (09.03.2003) ஞாயிறு

இக்கண் பரிசோதனை முகாமில் வெளிநாட்டு கண் பரிசோதகர்களும், எரிக்கணேஷிம் அவரது சகாக்களும் கலந்துகொள்வர். இக்கண் பரிசோதனை முகாம் அமரர் சு.சிறீபாஸ்கரன் இல்லத்தில் நடைபெறும். அத்துடன் கண் பரிசோதனை செய்தவர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கப்படும்.

மல்லாகம். (15387) **கிராம அபிவிருத்திச் சங்கம்.**

---

**மணிக்குரல் மணிவதனன் + ஜெயச்சித்திரா**
**8ஆம் ஆண்டு ஞாபகார்த்த கலைப் போட்டிகள்**

*இன்று மாலை 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில்*
நிகழ்ச்சிகள்:
** தேனிசை மழை * பாட்டுக்குப் பாட்டு ★ பிறேக் டான்ஸ்*
*2003இன் இசைச்சக்கரவர்த்திகள் சாரங்கா இசைக்குழு வழங்கும்*

**ராஜராகம்**

ரிக்கட் மண்டப வாயிலில் பெற்றிடலாம்.

*விளம்பர அன்பளிப்பு:* **கல்யாணி கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (15325)

---

## வீடு வாடகைக்குத் தேவை

எமது நிறுவன உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்கு நல்லூர், திருநெல்வேலி உட்பட மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் வீடு வாடகைக்குத் தேவை.

*தொடர்பு:* **புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி**
இல: 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (C/26850)

---

## இலக்கிய நூல்களுக்கான பரிசுத்திட்டம் - 2002

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01. நாவல்
02. சிறுகதை
03. கவிதை
04. நாடகம்
05. சிறுவர் இலக்கியம்
06. இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
07. உயர்கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.

*போட்டி விதிகள்:*

01. ஒரு எழுத்தாளர் எல்லா போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.
02. பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03. நூல்கள் 2002ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கு நூல்களை அனுப்பும் போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் மே 15ஆம் திகதிக்கு முன்னர்
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, திருகோணமலை
எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆர்.தியாகலிங்கம்,
செயலாளர்.
(C/26854)

---

## மெய்வன்மைப் போட்டி

நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செ.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

இளைப்பாறிய அதிபர் லயன் சி. கேசவராஜன் சிறப்பு விருந்தினராகவும் வைத்திய கலாநிதி சோ.சுந்தரராஜன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (ஐ-152)

☆ ☆ ☆

யாழ்.வல்வெட்டி விநாயகர் வித்தியாலய மெய்வன்மைப்போட்டியும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் இன்று ஞாயிறுக்கிழமை அதிபர் சிவகுரு சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

இதில் எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி. பிரதம விருந்தினராகக் கலந்து கொள் வார். (ஓ)

☆ ☆ ☆

யாழ்.புனித மரியாள் வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஓ-51)

☆ ☆ ☆

வரணி குடமியன் அ.த.க. பாடசாலை மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.விநாயகமூர்த்தி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கோட்டகல்வி அதிகாரி என்.சத்தியநாதன் கலந்து கொள்வார். (ஐ)

## 'பூஜா' என்னும் அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்9

பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனம், திருமறைக் கலாமன்ற அனுசரணையுடன் வழங்கும் 'பூஜா' என்னும் ஓராள் அரங்க நிகழ்வு (தனியொரு பெண்ணின் அளிக்கை) எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இந்நாடகம் மேடையேற்றப் படவுள்ளது.

வான் நட்சத்திரத்திலேயே வாழ்க்கையை ஓட்டி, சடங்கோடும் சம்பிரதாயத்தோடும் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி, நடப்பியல் வாழ்க்கையுடன் முரண்படும் ஓர் இந்தியப் பெண்ணான றஞ்சான என்பவருடைய கதைப் படைப்பு இதுவென தெரிவிக்கப்பட்டது.

அபத்தம், ஹிஸ்ரீறியா, இன்பியல், மதச்சடங்குகள், தென்னாசியக் கதை கூறல்கள், போலி நம்பிக்கைகள் போன்றவற்றை 12 பாத்திரப் படைப்புக்களினூடாக தனியொரு பெண்ணாக ராணி மூர்த்தி அளிக்கை செய்யவுள்ளார். (ஐ-9)

---

**சமூக அபிவிருத்தி மன்றம்**

## வருடாந்த பொதுக்கூட்டம்

இன்று (09.03.2003) நடைபெறவிருந்த மேற்படி மன்றத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் 22.03.2003 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

257/2, 1 ஆவது மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/26855) - தலைவர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **திரு.P.செல்லத்துரை**
அவர்களின் புதல்வன்

**செல்வன் மோகன பிரதீபன்**

08.03.2003இல் காலமாகிவிட்டார். அவர் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. (15386) **ஆசிரிய வட்டம்.**

---

# மரண அறிவித்தல்கள்

## இராஜசேகரம் சிவராஜா

திருநெல்வேலி, சிவன்கோயிலடியைச் சேர்ந்த இராஜசேகரம் சிவராஜா அவர்கள் வெள்ளிக்கிழமை 07.03.2003 அன்று இரவு காலமானார்.

அன்னார் பாக்கியலக்சுமியின் அன்புக் கணவரும் கிரியாதேவி, நிர்மலாதேவி (ஸ்பொன்ஸ்), ரூபா, கலாதேவி, லதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் திருமதி சரஸ் ஆகியோரின் சகோதரனும் பாலசுப்பிரமணியம், கருணைநாயகம், பி.ஏ.ஜி. மோகன், சுரேஷ், கண்ணன் ஆகியோரின் மாமனாரும் முகுந்தன், ராஜி, நஷோத், ஆரணி, சனோஜ் ஆகியோரின் பேரனும் நைஜல், யுகேஸ் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2003)ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதேச செயலகம்,* (C/26852) தகவல்:
*நல்லூர்.* ரூபா மோகன் (*மகள்*).

## குட்டித்தம்பி குலசிங்கம

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, இலகடியைச் சேர்ந்தவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான குட்டித்தம்பி குலசிங்கம் 07.03.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - புதுநாயகம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான விஸ்வரட்ணம் - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் சாந்தாதேவியின்(குஞ்சு) அன்புக் கணவரும் கிரிதர், ஷர்மிதா (மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரவணமுத்து மனோன்மணியின் (அத்தை) பெறாமகனும் இரத்தினசிங்கம், பரராஜசிங்கம், ராணி, புனிதவதி, தவமணிதேவி, புஸ்பா ஆகியோரின் சகோதரரும் சறோஜினிதேவி (கிளி), தேவராணி, குணசீலன், தெய்வேந்திரராஜா காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் கருணாகரன், சறோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான சிவலோகநாதன் (ஆர்த்தி ஜுவல்லர்ஸ்), வசந்தாதேவி மற்றும் சந்திராதேவி, சூரியகுமாரி, நிர்மலாயினி ஆகியோரின் மைத்துனரும் தெட்சணாமூர்த்தி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் சோமபாலன், சிவனேசன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2003) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி,* தகவல்: தெட்சணாமூர்த்தி
*திருநெல்வேலி.* (15391) (ஓய்வுபெற்ற ஆசிரியர்).

## சபாரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சபாரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா 06.03.2003 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சபாரத்தினம் - சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் சந்திரமலரின்(கனடா) அன்புக் கணவரும் கனடாவில் வசிப்பவர்களான அபிராமி, அபிராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜனின் அன்புச் சகோதரரும் காந்தமலர், கருணகாந்தன், சந்திரகாந்தன், காலஞ்சென்ற விஜயகாந்தன் மற்றும் சிறிஸ்காந்தன், பவளமலர்(வதிரி), ரஞ்சிதமலர்(திருமலை), முருகதாஸ்(நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனடாவில் வசிப்பவர்களான சிவகுமாரி, சந்திராதேவி, சாந்தமலர் ஜெகதீஸ்வரி, வைகுந்தவாசன்(யாழ்.), சிவராசா(வதிரி), சிவேந்திரராசா (திருமலை), சிவஈஸ்வரி(நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனடாவில் வசிப்பவர்களான சிவகாந்தன், மாதுரி, சாரங்கன், துசிந்தா, சாதனா, கர்சனா, கீர்த்தனா, துசி, மயூரன், திசான், திசானி மற்றும் நீர்வேலியில் வசிப்பவர்களான கபிர்த்தனா, யதுசனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திசாந்தினி(கனடா),வதிரியில் வசிப்பவர்களான கஜந்தி, அருண்யா, லக்சனா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் திருமலையில் வசிப்பவர்களான சரண்யா, கிருஷ்ணியா, செந்தில் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.03.2003) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு அச்சுவேலி தெற்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி தெற்கு,* தகவல்: ந.முருகதாஸ்
*அச்சுவேலி.* (15388) (மைத்துனர் - நீர்வேலி வடக்கு).

---



## 25ஆவது குருபூசைத் தினம்

**ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி**

ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி அவர்களின் 25ஆவது குருபூசைத் தினம் இன்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் சந்தி ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் ஆலயத்தில் நடைபெறுகின்ற திருவாசக முற்றோதலிலும் நண்பகல் 12.30 மணிக்கு நிகழும் அன்னதான நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு (சந்தி),
வர்த்தகர்கள்.
(15382)

---

## வன் புலி வாகனனே மணிகண்டா சரணம்



எண்ணியதை திண்ணமுறச் செய்திடும் என்றும் உள்ள பரம் பொருள்
இனியவன் மணிகண்டன் குடிகொண்டிருக்கும்
ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி மஹோற்சவம் இன்று ஆரம்பம்.
அனைவரும் வருக! அருள் பெறுக!

கனகசபை சுந்தரலிங்கம்
(காரை.மணிகண்டன்). (15393)



## வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கிறது:

# ஊழியர் கோரிக்கையை நிறைவேற்ற ரூ.20 லட்சம் நிதி ஒதுக்க நடவடிக்கை

### பல்கலை· வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்9

கல்விசாரா ஊழியர்களுக்கு இடர் கடன் வழங்கப்படவேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் கடந்தசில நாள்களாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தையடுத்து, யாழ். பல்கலைக்கழக நிதியிலிருந்து ரூபா 20 லட்சத்தை ஒதுக்கீடு செய்வதற்கு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை முயற்சித்துவருவதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக நாளை திங்கட்கிழமை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைமையகத்தில் இடம்பெறும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களின் ஒன்றுகூடலின்போது ஆராயப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை, பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் போராட்டம் தொடர்ந்து நடைபெறுமெனவும் - பரீட்சைகள், மின்சாரம், பாதுகாப்பு மற்றும் நீர்விநியோகம் போன்ற துறை ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபடவுள்ளதாகவும் - ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.கலாராஜ் தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருந்த வெளிவாரி வணிகமாணி பகுதி - 1 பரீட்சைகள் யாவும் காலவரையறையின்றி மீண்டும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களை யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை - தமது போராட்டம் வெற்றிபெறவேண்டுமென இறைவேண்டுதல் செய்து ஊழியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயத்தில் பொங்கல் வழிபாடொன்றை நடத்தினர். (ஓ-9)

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பாதுகாவலர் சங்கம் ஆராய்வு!

### இன்று வேம்படியில் சந்திப்பு

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளுக்கு, பிரதமரின் செயலாளர் அளித்த வாக்குறுதிப்படி இற்றைவரையும் படையினரால் கைது செய்யப்பட்டோர் தொடர்பான நிலைவரத்தை அவர் வெளியிடவில்லை எனவும் -

இதனையடுத்து பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இன்றைய சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளதாகவும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளார். (எ-9)

### அச்சுவேலி கைத்தொழில் பேட்டைமூலம்

## இம்மாத நடுப்பகுதி முதல் கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகள் இந்த மாதம் நடுப்பகுதியில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

கோழிக்குஞ்சுகளை உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து இடைக்காலத்தில் கோழிக்குஞ்சு உற்பத்தி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த மாதம் பிற்பகுதியில் அடைவைக்கப்பட்ட முட்டைகளில் இருந்து பெறப்படவிருக்கும் கோழிக்குஞ்சுகள் இந்த மாதம் நடுப்பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த குஞ்சுகள் எதிர்காலத்தில் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் - கூறப்பட்டது. (எ-11)


## அறிவித்தல்

தென்பகுதியிலிருந்து எமது பகுதிக்குள் வியாபார நோக்கம் கருதி சிற்றூர்திகள் கொண்டு வருவதற்கு 2003.03.15 ஆம் நாளிலிருந்து முகவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

பணிப்பாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## பணிநிலை வெற்றிடம்

ஆயப்பகுதி
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதியில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன:

**ஆயகிளர்நிலை அதிகாரி** (ஆண்) | **கணக்காய்வாளர்** (ஆண்)

**பயிற்சிக்காலச் சம்பளம் 6500/=**

தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணி அல்லது தொழில் நிர்வாகமாணி அல்லது பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**ஆயஅலுவலர்** (ஆண்)

தகைமைகள்:

1. க.பொ.த (உ.த) இல் வர்த்தகம் அல்லது கணிதப் பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சமையலாளர்** (ஆண்) (முன் அனுபவம் விரும்பத்தக்கது, சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

**பொருத்தமானவர்கள் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 1.00மணி வரை சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைகள் மற்றும் சான்றிதழ்களுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு சமூகம் தரவும்.**

ஆயப்பகுதி நடுவப்பணியகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள், கிளிநொச்சி.


### அறநெறிப் பாடசாலை இயங்குகிறது

வரணி,மார்ச்9

சுட்டிபுரம் ஆலய வளவில் இயங்கிய அறநெறிப்பாடசாலை தற்சமயம் வரணி மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில தற்சமயம் இயங்கத் தொடங்கியுள்ளது. போர்க்கால சூழ்நிலையாலும் சுட்டிபுரம் ஆலய சுற்றாடலில் பாதுகாப்புப் படையினரின் முகாம் இருந்தமையாலும் சில காலம் அங்கு இப்பாடசாலை இயங்காமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-170)

### இலவச உளவியல் சிகிச்சை

யாழ்ப்பாணம்,மார்ச்9

யுத்தத்தினால் உடல், உள பாதிப்புக்குட்பட்டவர்களுக்கான இலவச உளவியல் சிகிச்சைகளை குடும்பப் புனர்வாழ்வு நிலையம் ஆரம்பித்துள்ளது. கோவில் வீதியில் அமைந்துள்ள குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் அலுவலகத்தில் பிரதி ஞாயிறு தோறும் இச்சிகிச்சை நடைபெற்றுவருகின்றது.

இச்சிகிச்சை முகாமில் பங்குபற்ற விரும்புபவர்கள் அலுவலகத்தில் நேரடியாக தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

### பரந்தன் ஊழியர் சம்பளம்

பரந்தன் இரசாயனக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான சம்பளம் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும் என்று கூட்டுத்தாபன தொழில் முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஜ-3)

### மகளிர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்9

அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டிலான மகளிர் தின விழா நிகழ்வுகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தலைவர் திருமதி இ.செல்வராணி தலைமையில் இடம்பெறவிருக்கின்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி கலைமகள் சிவராசா கலந்துகொள்வார். (ஜ-3)

★ ★ ★

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் அனைத்துலக மகளிர் தின விழா நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டிதை வடிவதியின்பிள்ளை கலந்து கொள்வார். சிறப்புரைகள், கௌரவிப்புக்கள் ஆகியன இடம்பெறும். (ஜ-3)

## மனித மேம்பாட்டு உதவித் திட்டம்



முன்னாள் அதிபரும் கல்விமானும் சமூக சேவையாளருமாகிய அமரர் முருகேசு பரமேஸ்வரனின் ஞாபகார்த்த தினத்தையொட்டி மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்ச்சியை பரமேஸ்வரன் ஞாபகார்த்த சபை கடந்த ஆண்டுமுதல் நடத்திவருகிறது.

திருநெல்வேலி கிழக்கில் உள்ள வாலையம்மன் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்வில் வறிய மாணவர்களுக்கு மனித மேம்பாட்டு உதவியாக அப்பியாச புத்தகங்களும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது ஆண்டாக இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்வில் செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், பரமேஸ்வரன் பாலர்பாடசாலை ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்கப்படவுள்ளது.

இன்றைய நிகழ்வில் கௌரவிப்பு பெறுபவராக தெரிவுசெய்யப்பட்டிருப்பவர் முன்னாள் ஆசிரியரும் எழுத்தாளருமான அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. காலஞ்சென்ற அதிபர் பரமேஸ்வரனின் விருப்பப்படி வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி, சமூகப் பெரியோர்களை கௌரவித்தல், சமூக நட்புறவை வளர்த்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு தோறும் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மனித மேம்பாட்டு உதவி வழங்கும் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கி திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க உதவுமாறு ஞாபகார்த்த சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

### பணம்கொடுக்க தாயார் மறுப்பு:

## சோற்றுப்பானையை விற்று ஐஸ்பழம் வாங்கிய தனயன்

ஊர்காவற்றுறை,மார்ச்9

ஐஸ்பழம் வாங்குவதற்கு தாயார் பணம் கொடுக்க மறுத்ததை அடுத்து, அலுமினிய சோற்றுப்பானையைத் தூக்கிச் சென்று வியாபாரியிடம் கொடுத்துவிட்டு ஐஸ்பழம் வாங்கினான் சிறுவன் ஒருவன்.

இச்சம்பவம் அண்மையில் எழுவைதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் கூறப்படுவதாவது:-

அயல்வீட்டுச் சிறுவர்கள் ஐஸ்பழம் வாங்கிப் பருகுவதை அவதானித்து ஆசை கொண்ட சிறுவன், தனது தாயாரிடம் சென்று பணம் கேட்டுள்ளான். தாயார் மறுத்துவிட்டார். அப்போது, அலுமினியப் பொருள்களுக்கு ஐஸ்பழம் வழங்கப்படுமென்பது சிறுவனுக்கு தெரியவந்தது. நேரே சமையலறைக்குச் சென்ற சிறுவன் சோற்றுப் பானையினை வெறுமையாக்கி, நெளித்துவிட்டு ஐஸ்பழ வியாபாரியிடம் கொடுத்துள்ளான்.

வீட்டில் சோற்றுப் பானையைக் காணாத பெற்றோர், ஐஸ்பழம் அருந்தியபடி வந்த சிறுவனைப் பார்த்து திகைத்து நின்றனராம் (எ-16)

## சாவகச்சேரி நகரப் பகுதிக்கு நேற்றுமுதல் பகலில் மின் வசதி

சாவகச்சேரி நகரப் பகுதிக்கான பகல்நேர மின் விநியோகம் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவில் வைக்கப்பட்டுள்ள ஜெனரேற்றரிலிருந்து மின் விநியோகம் வழங்கப்படுகிறது.

தென்மராட்சி பிரதேச செயலகத்திலிருந்து பெரிய அரசடி வரையிலான பகுதியில் உள்ள திணைக்கள அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றுக்கு தினமும் காலை 10 மணி தொடக்கம் மாலை 4மணிவரை மின்விநியோகம் வழங்கப்படுமென மின் அத்தியட்சகர் வி.சடாச்சரமூர்த்தி தெரிவித்தார்.

வீடுகளுக்கு மின் விநியோகம் பெறவிரும்புவோர் மீசாலை, புத்தூர் சந்தியில் உள்ள மின் பாவனையாளர் அலுவலகத்தில் உரிய படிவத்தினை பெற்று விண்ணப்பிக்குமாறும் தெரிவித்தார். (ஜ-117-31)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 10 - 1919 | 17 - 02 - 2002 |

**சின்னையா செல்லையா** (மந்துவில்)

(முன்னாள் வீதிப் பரிசோதகர், இ.போ.ச.)

**திதி : 09.03.2003**

எமது அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்த ஓராம் ஆண்டை. சரவிழிகளுடன் சந்திக்கும் பாச உறவுகளின் கண்ணீர்க் காணிக்கை.

நாவற்குழி,
கோப்பாய் மத்தி (1.5396). குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் நடேசன்

(முன்னாள் C.T.B நடத்துநர்)

கோப்பாய், கிருவானை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடேசன் 07.03.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவகாசிப்பிள்ளையின் அன்பு மகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் கந்தையா சிதம்பரப்பிள்ளை, செல்லம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் முகுந்தன்(ஜேர்மனி), திருவேணி, ரவீந்திரன்(நோர்வே), கௌரிவேணி ஆகியோரின் தந்தையும் சிவகௌரி, சுதாகரன் ஆகியோரின் மாமனாரும் ஜஸீவன், றட்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெய்வானைப்பிள்ளை (மனைவி),
பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (15397)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இந்தியத் தயாரிப்பிலான புதிய நீளகோணங்கள் 24", 18", அவுசா அம்புகள் (SSA 250m) விற்பனைக்குண்டு. தொடர்பு: M.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (15199)

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (சி-26826)

புதிய குட்றிச் (தமிழ்) ரைப்ரைற்றர் (Godrej Prima Double Carrier) தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.பி.ம. ஆரோக்கியநாதர், இல. 32/05, அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (15323)

நல்ல நிலையிலுள்ள Sony T.Vகள் 14" 21", 14" - 9500/- 2184 - 18500/- $R_{21}Q_1$ (இரட்டை ஸ்பீக்கர்) - 22500/- National Rx 49 (ஸ்பீக்கர் கழற்றக்கூடியது), ரேடியோ கெசெற் 3000/- விற்பனைக்குண்டு. தொடர்பு: R.மகேஸ்வரன், K.K.S. வீதி, சிறுவா பூங்கா முன்பாக, மல்லாகம். (15378)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகள் Singer, Sisil 80, Sisil Deluxe என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 103, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (ICRC க்கு அருகில்). (15373)

2 SRI மொறிஸ்மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-049737. (15341)

ஆபிரிக்கன் லவ்பேட்ஸ் (African Love Birds) விற்பனைக்குண்டு. தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவென்யு, கொட்டடி, யாழ்ப்பாணம். (15371)

G-11 National Deck, 3' - 0x 3'-6" அளவு யன்னல் (பாலை) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: A.T. செல்வரத்தினம் "ராஜேஸ் இல்லம்", மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
T.P. 222 3695. (15376)

நல்லின பூச்சி நீக்கப்பட்ட அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.M.A. மஞ்சுநாதன், 6/8, மணிக்கூட்டுவீதி (பெருமாள் கோயில் பாடசாலை முன்பாக), தினமும் பிற்பகல் 4-6 மணிவரை. (15375)

கல்பேட்ஸ், புறொயிலர் 1Kg 140/- சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் Lion பொம்மேரியன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மான்ஸ் பாடசாலை அருகில், டச் ரோட், உடுவில். (15330)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர், வீடியோ சென்ரா வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15288)

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ்.கண்டி வீதி, அரியாலையில் வெறுங்காணி 3 பரப்பும், அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் அருகில் மகாத்மா வீதி, டச்சு வீதி முகப்பில் வீட்டுடனான காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். புவனேந்திரன், 102 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (15348)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pedigreed Dobermann Pincher pups from Andigama Kennels எங்கள் சொந்த நாயின் குட்டிகள் கொழும்பிலிருந்து 15-03-2003 இல் தருவிக்கப்படும். தேவையானோர் 13-03-2003இற்கு முன் பதிவு செய்யவும். அத்துடன் அழகான Great Dane X Dobermann Pincher குட்டிகளும் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15289)

நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் மாதம் நிரம்பியவை விற்பனைக்குண்டு. முகவரி: ஸ்ரீகிருஷ்ணா துரஸ் பெட்டி சாந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (15362)

## DOBERMANN PINCHER PUPS

Pedigreed Registered Big boned Black &Tan, Liver Brown Issabella colour High Quality pups from our andigama kennels colombo to be delivered on 15.03.2003. Booking accepted till. 13.03.2003 Thanapalasingam (Nallur Video centre compound) 19, Murugesar Lane - Nallur. (15374)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ கிறிஸ்தவ குடும்பப் பெற்றோர் 1972இல் பிறந்த 5'5" உயரம், மெலிந்த, அழகான (Fair& Lean) நன்கு படித்த, ஆங்கில அறிவுள்ள மகளுக்கு Dr./Engineer/ M.Sc./B.Sc. தகைமையுள்ள மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றனர். இந்துக்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் வழங்கப்படும். தொடர்பு: T.P. 0777-630168, E-mail prop 228 @ yahoo.com விளம்பர இல. 1813, உதயன், யாழ்ப்பாணம். (15337)

## வாடகைக்குத் தேவை

யாழ்நகருக்குள் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு வகுப்புகளை நடத்துவதற்குப் பொருத்தமான வீடு/ கட்டடத் தொகுதிகள் தேவை. தொடர்பு: T.P 0777 662033, 01 362547.(15339)

## தவறிவிட்டது

மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் 06-03-2003 அன்று கறுப்புநிற Campus Bag உடன் தேசிய அடையாள அட்டை, செவ்விளநீர்க்கலர் பேர்ஸ், திறப்புக் கோர்வை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சசிகுமார் நகைமாடம், 35, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (சி-26849)

## தமிழ்....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)
முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. அரச வங்கிகள் - வர்த்தக ரீதியில் - தகுதியான பிணையுடன் - கடன் வழங்க அவற்றிற்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

வடமத்திய, வடமேல் மாகாணங்களில் உள்ள அரிசி ஆலைகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன.

இவற்றிக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை வங்கிக்கு நான் பணிப்புரை வழங்கியுள்ளேன்.

அரச வங்கிகளில் கடன் பெற்று திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது இப்போது 250 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அரச வங்கிகளில் கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்தாதவர்களது பெயர்களை இங்கு எம்.பிக்கள் தெரிவித்தனர். இந்த எம்.பிக்களில் சிலர் மீதே வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (எ)

## உடன் தேவை

ஆண்டு 6 மாணவனுக்கு ஆங்கில மொழி மூலம் கணிதம், சுகாதாரம், சுற்றாடல் ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
கொடுப்பனவுகள் நியாயமான அளவில் வழங்கப்படும்.

தொடர்பு:-
S.அமலன்
18/2,கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
T.P. 222 3688, 0777 245021
(15372)

## மூக்குக் கண்ணாடி விநியோகம்

தென்மராட்சி,மார்ச்9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஜனவரி மாதம் மட்டுவிலில் நடத்தப்பட்ட இலவச பரிசோதனை முகாமில் கண்ணில் பாதிப்பு ஏற்பட்ட 200 பேருக்கு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் வைத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (எ-117)

## விற்பனைக்கு

டீசல் எஞ்ஜின் HP 12/2, RPM - 650 விற்பனைக்குண்டு.
தொடர்பு:
K.செல்வம்
சிவன் மில்,
K.K.S. வீதி, தெல்லிப்பழை.
(AGA காரியாலயம் முன்பாக)
(15383)

வளன்புரம், கொழும்புத்துறை

## புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா - 2003

10-03-2003 - 19-03-2003

புனித சூசையப்பரே! எங்கள் ஆபத்துக்களில் உம்மண்டை ஓடிவந்தோம்.


10-03-2003 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் பெருவிழா ஆரம்பமாகி ஆராதனைகள் தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறும்.

18-03-2003 திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும், ஆசீரும்.

19-03-2003 பெருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

புனிதரின் அருளாசி பெற
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

புனித சூசையப்பர் ஆலயம்,
வளன்புரம், கொழும்புத்துறை.
(15378)
பங்குத் தந்தையும்,
இறை மக்களும்.
(வளன்புரம்)




## Canadian College of Business & Computers

130 Bloor St,West , Suite 901 Toronto, Ontario, Canada, M5S 1N5 Phone 1-416413-1234 Fax: 1-416-413-0314

A n opportunity to be a part the world's next trillion-dollar industry!

Fiber Optics Engineering at CCBC is suppored by Ontario Photonics Education and Association (OPETA), a think tank comprising of the best academic minds of Canda's Universities and internationally reowned industry leaders like JDS Uniphase.

All in Toronto! A Trendy, upscale and a very cool place to learn. Supported by intensive English language programs, guidance counsellors speciallized in on-the-job training with 10-start dates throughout the year.

**Scholarship Application Requirements**

1. Passport Copy
2. Birth Certificate
3. Educational Certificates / Transcripts
4. Employment Letter, if any
5. Fee of US $10 by Demand Draft in favour of "Canadian College of Business & Computers"
6. Proof of sufficient funds for tuition payment and living expenses; (estimated tuition fees: US $1,500 to US $8,000 depending on scholarship awarded; living expenses for two years - US $10,000)



Aptitute Test and Interviwe:
March 22 and 23
Location: BMICH, Colombo 07

**Scholarship Application Submission Deadline**

March 21, 2003
Ms. Anushya
Ceylinco Consultancy & Allied Services
315, R.A. De Mel Mawatha, Colombo 03
Tel: 074-710240

WWW.CCBC.CA

## விலாசம் மாற்றம்

Woodsons
68-70, MANIPAY ROAD, JAFFNA. DIAL: 2430

வாடிக்கையாளர்கள் வசதியை முன்னிட்டு எமது ஸ்தாபனம் முட்டாஸ்கடை சந்திக்கு அண்மையில் வியாபாரச்சேவையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

வூட்ஸ்சன்ஸ்

68-70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 — 222 2430

தரமான மரம் - உருக்குத் தளபாடங்கள், கணனி மேசைகள் - கணனி கதிரைகள்,
ஆர்ப்பிக்கோ மெத்தை விநியோகஸ்தர்கள் "சியஸ்டா" மெத்தைகள்
[கூட்டுறவு உற்பத்தி Co-op] – ரெக்சின் - Rexine வகைகள் யாவும் கிடைக்கும் இடம்.
(15364)